பக்கங்கள்: 20 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 20, புதன்கிழமை 03.05.2017 | கதிர் 178

குறைந்த செலவில் குடும்பமாக
கனடாவில் குடியேற...
WINSTAR VISA
CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641



# தமிழர்களுக்கு இந்தியா எதுவுமே செய்யவில்லை!

## சரவணபவன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், மே 03

**இந்தியா இதுவரை இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சார்பாக எதையும் செய்ய வில்லை. இலங்கை அரசுக்குச் சார்பாகவே செயற்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் இதே போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமை கண்டிக்கத்தக்கது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் காட்ட மாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.**

### 'உதயன்' ஊடகப் பணியாளர்களுக்கான அஞ்சலி நிகழ்வில் நேற்று அவர் உரை

இந்தியாவுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் அடங்கிய கருத்துக்களை அவர் நேற்று வெளியிட்டார் என ஊடகங் களில் பரபரப்பாக பிரசுரமான செய்திகள் குறித்து 'காலைக் கதிர்' அவரிடம் கேட்டபோது, அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

பக்கம் 18 »

## அரசமைப்பு வழிகாட்டல் குழு இன்றும் நாளையும் கூடுகிறது

### இடைக்கால அறிக்கையை இறுதி செய்யும் வாய்ப்பு

கொழும்பு, 03

புதிய அரசமைப்பு தயாரிப் பதற்கான அரசமைப்புக் கவுன் ஸிலின் வழிகாட்டல் குழு இன் றும் நாளையும் நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் கூடு கின்றது.

அதிகாரப்பகிர்வு உட்பட்ட விட யங்கள் அடங்கிய வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்

பக்கம் 18 »

## சர்வதேச ஊடக தினமான இன்று யாழ். நகரில் கவனவீர்ப்பு நிகழ்வு

சர்வதேச ஊடக சுதந்திர தின மான இன்று ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்டும், கடத் தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட் டும் உள்ள ஊடகவியலாளர்கள் தொடர்பான நீதி விசாரணை களை முன்னெடுக்க வலியுறுத் தியும் யாழ். ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்பில் இன்று கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்படவுள்ளது.

யாழ். மத்திய பேருந்து

பக்கம் 18 »

## பெரும் வேலை நிறுத்தத்துக்கு மருத்துவ அதிகாரிகள் முஸ்தீபு!

கொழும்பு, 03

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரத்தில் அரசின் நிலைப்பாட்டை ஆட்சே பித்து நாடு தழுவிய ரீதியில் எதிர் வரும் வெள்ளிக்கிழமையன்று பெரும் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது.

ஆசிரியர்கள், தாதியர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை உள்ளிட்ட 160 துறைசார் தொழிற் சங்கங்கள் அன்றைய தினம் போராட்டத்தில் குதிப்பர் என்றும் –

நாடு முழுவதும் ஸ்தம்பிக்கும் வகையில் அன்றைய தினம் தொழிற் சங்க நடவடிக்கை அமை யும் என்றும் –

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள் ளன. (உ)

## இடைக்கால அறிக்கை குறித்து கூட்டமைப்புத் தலைமை நம்பிக்கை

கொழும்பு, மே 03

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சாதகமான அம்சங்கள் அடங் கிய வகையில் அரசமைப்பு வழி காட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை அடுத்த இரு வாரங் களுக்குள் வெளியிடப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சம்பந்தன் முழு நம்பிக்கையுடன் எதிர்பார்த் திருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையே –

பக்கம் 18 »

### அளப்ப அருணாசலம்



ஒரு நாளாவது தொழிலாளியாக வேலைபாத்தா நல்லது தானே பாருங்கோ...!

## தேர்தலில் வெல்வது குறித்து அரசு சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாது

### மேதினக் கூட்டம் காட்டுவது அதைத்தானாம்

கொழும்பு, மே.03

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையில் தேசி யத் தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவது குறித்து மைத்திரி - ரணில் அரசு சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாது.

பல்கலைக்கழக விரிவுரை யாளர் சங்கத்தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி இவ் வாறு தெரிவித்துள்ளார்.

காலிமுகத் திடலில் நடந்த கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டம் தொடர்பில் தனது முக நூல் பக்கத்தில் எழுதியுள்ள குறிப்பில் அவர் இதனைக் கூறி யுள்ளார்.

காலிமுகத் திடல் கூட்டம் அர சியல் நிலைப்பாடு ஒன்றை தெளிவுபடுத்தியுள்ளது. அரசின்

பக்கம் 18 »

## குப்பை அள்ளிய ஜனாதிபதி



கண்டி, மே 03

மே தினக் கூட்டம் இடம் பெற்ற மைதானங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதே சங்களைச் சுத்திகரிக்கும் நட

பக்கம் 18 »

## நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக் கோரி

# நாடுமுழுதும் ஒரு நாள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கத் தயாராகிறார் மஹிந்த!

கொழும்பு, மே 03

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாடு முழுவதும் ஒரு நாள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று கூட்டு எதிர்க்கட்சித் தீர்மானித்துள்ளது.

இவ்வாறானதொரு தீர்மானத்தை நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானம் எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கும் தான் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காலி முகத்திடலில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் பங்கேற்றிருந்ததன் காரணமாக, கூட்டு எதிர்க்கட்சி தனது பலத்தை நிரூபித்துள்ளது என்று கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோரி நாடு முழுவதிலும் ஒரு நாள் ஹர்த்தால் போராட்டம் ஒன்றை நடத்த கூட்டு எதிர்க்கட்சித் தீர்மானித்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## தேர்தலுக்கு அஞ்சுகின்றது மைத்திரி - ரணில் நல்லாட்சி

### கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, மே 03

நல்லாட்சி அரசு தேர்தலுக்கு அஞ்சுகின்றது என்று கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தலங்கமவில் நடைபெற்ற மே தினக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உழைக்கும் மக்களின் அனைத்து உரிமைகளையும் நல்லாட்சி அரசு முடக்கி வருகின்றது. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் நிச்சயம் தோல்வி ஏற்படும் என்பதை அரசு புரிந்து கொண்டுள்ளது.

தேர்தல் நடத்தினால் அரசின் மெய்யான முகம் வெளிப்பட்டுவிடும் என்ற காரணத்தால் தேர்தல்களுக்கு அரசு அஞ்சுகின்றது. இந்த நல்லாட்சி அரசுக்கு நீண்ட ஆயுள் கிடையாது.



இந்த நாடே துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வருகின்றது. பிரதேச சபைகள் இன்று பெரிய குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ளன.

முடிந்தால் அரசு தேர்தலை நடத்தி வெற்றியீட்டிக் காண்பிக்கட்டும் .- என்றார். (ஐ)

## ரஷ்ய பொருளாதார மாநாட்டுக்கு அமைச்சர் ரிஷாத்துக்கு அழைப்பு!

### அந்த நாட்டுத் தூதுவர் நேரில் விடுத்தார்



கொழும்பு, மே 03

ரஷ்யா, சென் பீற்றர்ஸ் பேர்க்கில் நடைபெறவுள்ள சர்வதேச பொருளாதார மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனைக் கலந்து கொள்ளுமாறு அந்த நாட்டின் பிரதிப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம், 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த இலங்கைக்கான ரஷ்யாவின் தூதுவர் அலெக்ஸாண்டர் கார்ச்சேவ், அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் இந்த அழைப்பை நேரடியாக கையளித்துள்ளார்.

ரஷ்யத் தூதுவருக்கும், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்குமிடையிலான இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் பரஸ்பர வர்த்தகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கைக் கடலில் கைதானவர்களில் 30 மியன்மார் நாட்டவர் மிரிஹானவுக்கு!

### இரு இந்தியர்களுக்கு தொடர்ந்தும் மறியல்



யாழ்ப்பாணம், மே 03

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக நுழைந்த வெளிநாட்டு புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 32 பேரில் 30 மியன்மார் நாட்டவர்களே இவ்வாறு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

படகோட்டிகளான ஏனைய இரு இந்தியர்களையும் சட்டமா அதிபரின் அனுமதிபெறும் வரை தடுத்து வைக்குமாறும் மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி காலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கைப்பற்றப்பட்ட படகில் மியன்மாரைச் சேர்ந்த 16 சிறுவர்கள் உட்பட 30 பேரையும், இந்தியாவைச் சேர்ந்த 2 பேரையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவர்களை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்றுக்காலை இந்த 32 பேரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன் போதே மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முஸ்லிம் பொது மக்கள் ஒன்றியத்தின் முஸ்லிம் சட்டத்தரணி ஒருவர் மியன்மார் மக்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அகதி அந்தஸ்து கோரி மியன்மார் நாட்டு மக்கள் வந்தமையால் அவர்களை ஏதாவது அகதி அந்தஸ்து வழங்கும் நாட்டுக்கு அனுப்பும்வரைக்கும் இலங்கையில் தஞ்சமளிக்குமாறு அந்தச் சட்டத்தரணியால் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், 30 மியன்மார் நாட்டவர்களையும் உடனடியாக மிரிஹானவிலுள்ள தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ)

# வடக்கில் 300 பேருக்கு இராணுவப் பயிற்சிகள்

### சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தகவல்

கொழும்பு, மே 03

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் வடக்கில் 300 பேர்வரை இராணுவ பயிற்சியை நிறைவு செய்துள்ளனர் என்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று அணிகள் இந்த இராணுவ முகாமைத்துவப் பயிற்சியை நிறைவுசெய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இராணுவ பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு இராணுவ சீருடையை ஒத்த இருவகையான சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக ஓர் இராணுவ அதிகாரி பணியாற்றி வருகின்றார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி 1462 - 20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக ஸ்தாபிக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இலங்கை முழுவதுமாக 41 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக ஆயுதப் படைக்கும் பொலிஸ் சேவைக்கும் உதவுவதற்கு துணைப் படையாகச் செயலாற்றுவதற்கு இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று அந்தத் தகவல்கள் மேலும் குறிப்பிடுகின்றன. (ஐ)

## நீராவியடி விநாயகர் முத்துச் சப்பரத்தில் இன்று மாலை உலா

யாழ்ப்பாணம், மே 03

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் மண்டலாபிஷேகம் பூர்த்தி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை திருவூஞ்சல் இடம்பெற்று விநாயகப் பெருமான் முத்துச் சப்பரத்தில் வெளிவீதி உலாவருவார். (ச)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகள் மந்த கதியில்!

### விசாரணை உத்தியோகத்தர் பற்றாக்குறையே காரணம்

கொழும்பு, மே 03

விசாரணை உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றமையால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தடை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை நடவடிக்கைகளுக்காக பொலிஸ் உத்தியோகத்தர்களற்ற பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப் பாளர் நாயகம், ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இதுதொடர்பாக அரச நிர்வாகக் குழுவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. கணக்காய்வு, வங்கி நடைமுறை உள்ளிட்ட சில விடயதானங்களுக்காகச் சுமார் 100 பட்டதாரிகளுக்கான பற்றாக்குறை ஆணைக்குழுவில் நிலவுகின்றது. கொள்வனவுகள், பணத்தை வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் வைப்பீடு செய்தல் தொடர்பான விடயங்களை விசாரிப்பதற்காக அனுபவம் வாய்ந்த உத்தி யோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என்று இலஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

# 'இரணைதீவு எங்கள் சொத்து அதை நாம் இழக்கமாட்டோம்'

## அங்கிருந்து விரட்டப்பட்ட மக்கள் உறுதி





முழங்காவில், மே 03

இரணைதீவு மக்கள் தமது பூர்வீகக் காணிகளைக் கடற்படையிடம் இருந்துமீட்பதற்காக ஆரம்பித்த போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது. இரணைதீவு தமது உயிர்களை விட மேலான தங்கள் சொத்து எனத் தெரிவித்த மக்கள், அந்தத் தீவை தங்களிடம் வழங்க நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், பூநகரிப்பிரதேசசெயலாளர்பிரிவிற்குட்பட்ட இரணை தீவில் வாழ்ந்த 240 குடும்பங்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு கடற்படையினரால் அந்தத் தீவை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களில் 140 குடும்பங்கள் முழங்காவில் – இரணைமாதா நகரில் காணிகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கான போக்குவரத்து, மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும், மக்கள் தமது சொந்தத் தீவில்சென்றுகுடியேறுவதையே விரும்பியுள்ளனர். தங்கள் சொந்தத்தீவைவிடுவித்துஅங்கு தங்களை மீளக் குடியமர்த்த வலியுறுத்தி நேற்று முன்தினம் முழங்காவில் இரணைமாதா நகரில் அவர்கள்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமதுகோரிக்கைகள்தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

இரணைதீவு என்ற பழமை வாய்ந்த தீவானது பல்வேறு இயற்கை வளங்கள் மற்றும் கடல்சார் வளங்களையும் கொண்டமைந்து காணப்படுகின்றது. இங்கு பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் கடலோடும் திறனையும் கடல் பற்றிய அறிவையும் அதிகமாகக் கொண்டிருந்தனர்.

இங்கு ஆண்கள்மட்டுமன்றி பெண்களும்கடற்றொழில்செய்தனர். அவர்களிடமும் கடல்சார் அறிவு நிறையவே இருந்தது. இதனால், நாம் அங்கு சென்று குடியேறவே விரும்புகின்றோம், – என அவர்கள் கூறினர்.

இரணைதீவில் மீளக்குடியேறி வாழ்வதற்கு 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 214 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கது. (ம-70)

# நாட்டில் வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு 8 பேர் மரணம்!

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்



யாழ்ப்பாணம், மே 03

இலங்கையில் வீதி விபத்துக்களால் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் இறப்புக்கள் நிகழ்கின்றன. வீதிப் போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காமையே விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணம் என யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்த.கணேசநாதன்தெரிவித்துள்ளார்.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் வீதிப்போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கான அங்கிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

மனித உயிர்களின் பெறுமதியை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். – என்றார். (ம)

# நகைகள் திருட்டு; ஒருவர் கைது!

புத்தூர், மே 03

புத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், 18 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேகத்தில் யாழ்.கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர். (ம)

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் விக்னேஸ்வரன் பதவியேற்பு





யாழ்ப்பாணம், மே 03

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் திங்களன்று காலை பதவியேற்றார்.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அவர் உத்தியோகபூர்வமாகத்தமதுகடமைகளைப் பொறுப் பேற்றார்.

அவரது பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர்களானபேராசிரியர்வசந்தி அரசரட்ணம், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை மேலும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தராக இருந்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் பதவிக் காலம் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் புதிய துணை வேந்தராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டார்என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இதுவரை எப்படியோ இருந்துவிட்டோம் இனியாவது வாழ்வுரிமை வழங்குங்கள்!

## கிளிநொச்சி பன்னங்கண்டி மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, மே 03

கிளிநொச்சி–பன்னங்கண்டி சரஸ்வதிகமம் மற்றும்ஜொனிக் குடியிருப்பு மக்கள் தாம் குடியிருக்கும் காணிகளுக்கான ஆவணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரக்கோரி நடத்திவரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 42 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இதுவரை காலமும் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்துவிட்டோம். இனியாவது எங்களுக்கு வாழும் உரிமையை வழங்குங்கள் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதிகாரிகள் முயற்சி எடுத்தால் அது முடியும் எனத் தெரிவிக்கின்ற மக்கள், தமது விடயத்தில் அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர் எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-70)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 03

யாழ்.முகாமையாளர்சம்மேளனம் 'பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் கூட்டுறவு உடன்படிக்கைசவால்கள்'தொடர்பான கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் யூரோவில்மாநாட்டுமண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. வளவாளராகபேராசிரியர்ஹொகான் சமரஜீவா கலந்து கொள்ளவுள்ளார்.

# மஹிந்த என்னதான் செய்தாலும் தேர்தலில் அவருக்கு தோல்வியே

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, மே 03

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த வடிவத்தில்எத்தனை கூட்டங்களைநடத்தினாலும் தேர்தல் ஒன்று வந்தால்தோல்வியையேசந்திப்பார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின்செயலாளரும்அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த தேர்தலுக்கு முன்னர் எத்தனை கூட்டங்களை நடாத்தினார் என்பதை அறி வீர்கள். இருப்பினும், தோல்வியையே சந்தித்தார். அடுத்த தேர்தலிலும் என்ன நடக்கப்போகின்றது என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம். இந்த நாட்டு மக்கள் சரியானதீர்மானத்தைஎடுப்பார்கள்.

தேர்தல் தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சியினர் என்னதான் சொன்னாலும், அடுத்த செப்ரெம்பர் மாதமளவிலேயே மாகாணசபைத்தேர்தலை நடத்தவுள்ளோம். – எனவும் அவர் மேலும் கூறினார். (ம)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிள்ளையார் கல்யாணம் போலவே தள்ளிப் போகும் உள்ளூராட்சித் தேர்தல்

பிள்ளையார் கல்யாணம் போல தள்ளிப் போகிறது உள்ளூராட்சித் தேர்தல்.

நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலமும் முடிவுற்று ஆண்டுகள் கடந்து விட்டன.

தேர்தல் முறைகள், சட்டச் சீர்திருத்தங்கள் என்ற பல்வேறு காரணங்களைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தலை இழுத்தடிக்கும் வேலை கனகச்சிதமாக நடக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மற்றும் விடயங்களை ஒட்டிய சட்டங்கள் திருத்தப்பட்டு விட்டன. திருத்தப்பட்ட சட்டங்களுக்கு அமைவாகவே அவற்றுக்கான தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். அப்படி நடத்துவதாயின் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்கள், எல்லைகளை மீள் நிர்ணயம் செய்து, வகுக்கப்பட்டு அது தொடர்பாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும் - என்று முதலில் காரணம் காட்டப்பட்டது.

எல்லை நிர்ணயத்துக்கான குழு நியமிப்பதில் இருந்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கின்றமை வரை விடயங்கள் 'சுவிங்கம்' போல நீண்ட காலம் இழுபட விடப்பட்டன.

விடயங்களைப் பார்த்துப் பொறுக்க முடியாத எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் - உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போடுவதற்காக வேண்டுமென்றே இழுத்தடிக்கிறார் என்ற சாரப்பட வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டும் நிலைமைக்கு இந்த விவகாரம் சென்றுள்ளது.

அதையடுத்து, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒருவாறு - காலம் தாழ்த்தியேனும் - வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. எனினும், அதற்குப் பின்னரும் கூட நிலைமை சீரடையவில்லை.

வர்த்தமானியில் ஏற்கனவே இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் பிரசுரிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிவிப்பில் தவறுகள் இருக்கின்றன என்றும், அவற்றைத் திருத்திப் பிரசுரிக்க மேலும் காலம் எடுக்கும் என்றும் இப்போது கூறப்படுகிறது.

இப்படி இழுபட விடுவதிலும் பார்க்க, இதுவரை இருந்த தேர்தல் நடைமுறைகளின் கீழ் இந்தத் தேர்தலை நடத்தி விட்டுப் போகலாம் என்ற கருத்து இப்போது வலியுறுத்தப்படுகின்றது.

உடனடியாக உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடத்தினால் கூட்டு எதிரணியுடன் அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஸ்வரூபம் எடுத்து விடுவார் என்று ஆளும் தரப்பு அஞ்சுவதால் தேர்தல் இழுத்தடிப்பு நாடகம் தொடர்கதையாக நீள்கின்றது என்று கூறப்படுகின்றது.

*"உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு எங்களுக்கு எந்த அச்சமும் இல்லை. நாளையே அதை நடத்த நாங்கள் தயார். சட்டத் தேவைகளைத் தான் நிறைவேற்றக் காலம் எடுக்கின்றது."* - என்ற சாரப்பட உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா வெளிப்படையாகக் கூறிச் சமாளித்தாலும், மஹிந்தர் என்ற அரசியல் சக்திக்குப் பயந்தே உள்ளூராட்சித் தேர்தலை அரசுத் தரப்பு இழுத்தடிக்கின்றது என்பது பலருக்கும் புரிந்த - தெரிந்த - உண்மைதான்.

கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற - கூட்டு எதிரணியின் - மேதினக் கூட்டத்துக்கு அலைகடல் எனத் திரண்டு வந்த ஜனசமுத்திரத்தைப் பார்த்ததும் அல்லது அது பற்றி அறிந்ததும், உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் இன்னும் சில மாதங்கள் தள்ளிப் போனாலும் போகலாம் என்று ஊகம் தெரிவிக்கின்றன கொழும்பு வட்டாரங்கள்.

இந்தப் பின்புலத்தில்தான் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மே நாள் உரைகளிலும் தேர்தல் தொடர்பில் கூட்டு எதிரணித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மாறி மாறி சவால் விட்டிருக்கின்றார்கள்.

*"முடியுமானால் காலிமுகத்திடலை மக்களைக் கொண்டு நிரப்பி மேதினக் கூட்டத்தை நடத்திக் காட்டுங்கள் என்று அரசு எனக்கு சவால் விடுத்தது. நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு, வெற்றிகொண்டு அதைச் செய்து காட்டியுள்ளேன். இப்போது நான் அரசுக்கு ஒரு சவால் விடுகின்றேன். முடியுமானால் மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்"* - என்று கூறியிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

அதேசமயம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சவால் பற்றிய தகவல் சரியாகக் கிடைக்க முன்னரே அவ்விடயம் தொடர்பில் தமது பதிலை அது போன்ற இன்னொரு மேதின நிகழ்வில் வைத்து அதிரடியாக வெளியிட்டிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

*"எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு நாங்கள் தயார். எத்தகைய சவாலுக்கும் முகம் கொடுக்கவும் நாம் முழுமையாக ஆயத்தமாக இருக்கிறோம்."* - என்று அதிரடி அறிவிப்பை விடுத்திருக்கின்றார் பிரதமர்.

கூட்டு எதிரணி, தேர்தலை நடத்தும்படி அரசுக்கு சவால் விடுக்கின்றது. ஏனைய தரப்புகளும் அந்தக் கோரிக்கைகளையே முன்வைக்கின்றன.


தத்தமது பிரதேச விடயங்களைத் தங்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம் கையாள்வது பொதுமக்களின் தலையாய அடிப்படை உரிமை. அதற்காகவும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

அரசின் பிரதமரும் எந்தத் தேர்தலுக்கும் தயார் என அதிரடி அறிவிப்பு விடுத்துள்ளார்.

ஆனால், தேர்தல் நடக்குமா என்பது கேள்விக்குறியே. கூட்டு எதிரணியின் இனவாதப் பூதத்துக்கு அஞ்சும் அரசுத் தரப்பு, ஏதேனும் சாக்குப் போக்குக் காரணங்களைக் காட்டி, தேர்தல் நெருக்குவாரம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவே பெரிதும் விரும்பும்.

# புதிய அரசமைப்பை நிறைவேற்ற எம்முடன் ஒன்றிணையுங்கள்!

## நாட்டு மக்களுக்கு ஹக்கீம் வேண்டுகோள்



கொழும்பு, மே 03

புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

கொழும்பு, கெம்பல் மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டைக் கட்டியெழுப்பி முன்னோக்கிக் கொண்டு செல்ல வெளிநாட்டு முதலீடுகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன.

அரச சொத்துக்களை வழங்காது, முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள மாற்று வழி இருந்தால் அது தொடர்பிலும் நிச்சயமாக அவதானம் செலுத்த வேண்டும்.

இந்தப் பயணத்துக்கு நாட்டு மக்களும் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். கடந்த அரசின் காலத்தில் பலர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை அனைவரும் அறிந்த ஒரு விடயமே.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாங்கள் உருவாக்கிய நல்லாட்சி அரசில் தான் இவற்றுக்கான நிவாரணங்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு இன்னும் நிறைவேற்றவேண்டிய பல விடயங்கள் நாட்டில் காணப்படுகின்றன. அந்த வகையில், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது அத்தியாவசியத் தேவையாகக் காணப்படுகின்றது.

அதிகாரப் பகிர்வு, புதிய தேர்தல் முறை போன்ற முக்கிய விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடமையை நிறைவேற்ற நாட்டு மக்களும் எம்முடன் கைகோத்துச் செயற்பட வேண்டும்.- என்றார். (எ)

# கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்றோர் மீது நடவடிக்கையில்லை

## முன்னைய அறிவிப்பில் மாற்றம்

கூட்டு எதிரணியின் கூட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

கண்டி-கெட்டம்பே மைதானத்தில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில், காலிமுகத்திடலில் இடம்பெற்ற மஹிந்த ஆதரவு அணியினரின் மே தினக் கூட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் பங்கேற்றிருந்தனர்.

இந்தநிலையில் கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில், கட்சியை ஒன்றிணைக்கும் செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு, அந்தத் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ)

# மைத்திரி-ரணில் அரசு தேர்தலில் இலகுவில் வெற்றி பெற முடியாது!

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத் தலைவர் கருத்து

நாட்டில் தற்போது காணப்படும் நிலைமைக்கு அமைய தேசிய தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவது தொடர்பில் மைத்திரி - ரணில் அரசு எண்ணிப் பார்ப்பதும் சிரமமானது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டம் தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் எழுதியுள்ள குறிப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-


காலிமுகத்திடல் கூட்டம் அரசியல் நிலைப்பாடு ஒன்றைத் தெளிவுப்படுத்தியுள்ளது.

அரசின் இருப்புக்கு சிங்கள பௌத்த மக்கள் இடையிலான அரசியலில் ஆதரவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

தேசிய மட்டத்திலான தேர்தல் ஒன்றில் வெற்றி பெறலாம் என்று மைத்திரி - ரணில் அரசு நினைக்குமாயின் மேலும் வலுவடைந்து, தமிழ், சிங்கள கட்சிகளின் ஆதரவை முழுமையாக பெற வேண்டியது அவசியம்.

இதன் ஊடாகவும் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் குறைவு. தேர்தல் வன்முறை, கள்ள வாக்குகள் ஆகியனவற்றின் மூலம் வெற்றி பெற்றாலும் அது அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

இது ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வருகின்றமையை விடப் பாரதூரமான நிலைமையாக மாறும். எவ்வாறாயினும் ராஜபக்ஷவினருக்கு மாற்றாக ஒரு சக்தியைத் தென் பகுதியில் உருவாக்குவது தற்போது எந்த வகையிலும் சாத்தியமாகாது .- என்றார். (எ)



விபத்தற்ற பயணமே விருப்பத்துக்குரிய பயணம்!

பக்க ஒழுங்கையிலிருந்து பிரதான வீதியை நோக்கி ஒருபோதும், வாகனத்தை பின்நோக்கிச் செலுத்தலாகாது.

விபத்தற்ற பயணமே விருப்பத்திற்குரிய பயணம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

04.05.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப. 9.09வரை
திதி: நவமி பி.இ. 12.03 வரை
சுபநேரம்: 7.26 - 8.56 வரை
இராகுகாலம்: 1.26 - 2.56 வரை

# வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்கு

## அதை அடைவோம் என கிழக்கில் சூளுரைத்தார் மாவை



அம்பாறை, மே 03

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இலக்கு. அந்த இலக்கை அடைவதற்காக நாங்கள் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா நேற்றுக் கிழக்கில் திடமான அறிவிப்பை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத்திற்கான மேதினம் நேற்று முன்தினம் அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே மாவை.சேனாதிராசா இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படிக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் -

அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் கட்சியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 60 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி தமிழர்களின் உரிமைக்காகப் பல வழிகளிலும் குரல்கொடுத்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மக்கள் இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். நிலங்கள் ஆக்கிரமிக் கப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்களை முஸ்லிம் சகோதரர்களுடனும் ஆட்சியாளர்களுடனும் பேசித்தீர்க்கவேண்டி உள்ளது.

கிழக்கு மக்களின் பலம் குறைவாக இருந்தால் வடக்கு மக்களின் பலம் அவர்களுக்கு உதவவேண்டும் என தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு கூறியிருந்தார். தந்தை செல்வாவின் காலத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினரால் தாக்கப்பட்டபோது, அந்த மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் தந்தை செல்வா. அதை யாரும் மறந்துவிட முடியாது.

### முஸ்லிம் பெண்களும் சத்தியாக்கிரகம்

1961 ஆம் ஆண்டு நான் மாணவனாக இருந்தகாலத்தில் தமிழரசுக் கட்சி பல இடங்களில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது. அப்போது நாம் அம்பாறைக்கு வந்தபோது இங்கே தமிழ்ப்பெண்களோடு இணைந்து முஸ்லிம் பெண்களும் அந்தச் சத்தியாக்கிரகங்களில் பங்கேற்றனர்.

அண்மையில்கூட அம்பாறை இறக்காமம் மாயக்கல் பகுதியில் சிங்களவர்களின் ஆதிக்கம் அதிகரித்தமையால் பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் ஜனாதிபதியிடம் சென்று கலந்துரையாடி நல்ல தீர்வைப் பெற்றுக் கொடுத்தனர். அதை வட மாகாண சபை உறுப்பினர் அஸ்வின் இவ்விடத்தில் கூறினார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த அரசாங்கத்தை மாற்றி புதிய அரசாங்கத்தைக் கொண்டுவருவதில் அவதானமாகச் செயற்பட்டவர்கள் தமிழர்கள். அதனால் தான் இன்று மைத்திரிபால தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சியில் இருக்கின்றது.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சி அமைப்பதன் மூலம் சிங்களக் கட்சிகளின் ஆதரவு இன்றி) முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராகத் தெரிவு செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பிய போதிலும் அதைச் செய்ய முஸ்லிம் தலைவர்கள் தவறிவிட்டனர்.

அன்று தந்தை செல்வா எமக்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக அகிம்சை வழியில் போராடினார். பின்னர் ஆயுதப்போராட்டம் இடம்பெற்றது. இன்று ஜனநாயக வழியில் தீர்வினைப் பெறுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இதற்கான பலமாக இருப்பது தமிழ் மக்களாகிய உங்களது வாக்குப்பலமே. உங்கள் வாக்குப் பலத்துடனும் சர்வதேசத்தின் உதவியுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழருக்கானதீர்வைப் பெற்றுக்கொள்ளும். என்றார். (ம)

# மஹிந்தவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த ஒத்துழைப்புத் தாருங்கள்!

## இது கருணா அம்மானின் கோரிக்கை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியம்.

-இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ் அரசியல் கட்சிகள் இனவாதம் பேசி நாட்டின் அமைதியைக் குழப்ப முயற்சிக்கின்றன. அதனை உடனடியாகத் தடுக்க வேண்டும்.

தமிழ் இனவாதக் கட்சிகளை விரட்டியடிக்கவே நாம் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளோம். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.

அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே அதிக அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதுபோன்ற அபிவிருத்தித் திட்டங்களை உலகில் எந்தத் தலைவரும் முன்னெடுக்கவில்லை.

மேலும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து மஹிந்த ராஜபக்ஷவே நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.- என்றார். (ஐ)

# மட்டுப்படுத்தப்படும் சிறுபோகம்; நீர் போதாமையே காரணமாம்!

கொழும்பு, மே 03

நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதால் இந்த முறை சிறு போகத்தின்போது பெரும்பாலான பிரதேசங்களில் பயிர்ச் செய்கைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 35 வீதமாக குறைவடைந்துள்ளது என்று நீர்வழங்கல் - வடிகாலமைப்புச் சபையின் நீர் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் வசந்த பண்டார பலுவஸ்வெவ தெரிவித்துள்ளார்.

பருவ மழை பெய்த போதிலும் போதுமானளவு நீர் கிடைக்கப்பெறவில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் சிறுபோக செய்கைகளுக்காக நீர் விநியோகிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கான நீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் பொலன்னறுவை மாவட்டத்தில் 75 வீதமும் அனுராதபுரத்தில் 30 வீதமும் சிறுபோகச் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவி 4 ஆம் யுனிற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 30 - 04 - 2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற கனகரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற புஷ்பராணியின் அன்புக் கணவரும், சாந்தி(லண்டன்), சாந்தகுமார்(லண்டன்), நந்தகுமார் (இலங்கை), வசந்தகுமார்(இலங்கை), வசந்தி(லண்டன்), ரவிக்குமார்(பெல்ஜியம்), ஜெயக்குமார் (கனடா), ராசகுமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வேலாயுதபிள்ளை மற்றும் மகாராசா, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அற்புதநேசன், சச்சிதானந்தம், சுஜேத்தா, இராசநளினி, கோமதி, கவிதா, கனிசக்தி ஆகியோரின் பாசமிகு மாமனும், கோணேசபிள்ளை, தனபாலசிங்கம், காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் சோமேஸ்வரி, புஷ்பநாதன், நவரத்தினம், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிவேதா, நிரோஜன், திலக்சா, திஸான், தட்சா, மேதரன், அபிசன், அபிநயன், அனுசாந், நிரோஸன், நிதேஸ், நிகேஸ், அபினா, ஆதேஸ், கவின், காருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04- 05 - 2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 12.30 மணியளவில் திருநகர் பாலியாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**இல. 341, 4ஆம் யுனிற்,**
**யோகபுரம், மல்லாவி, முல்லைத்தீவு.**

**தொடர்புகளுக்கு:**
வசந்தன் (மகன் - இலங்கை) +94779174980, +94773902331.
நேசன் (மருமகன் - பிரித்தானியா) +447536398073.
சச்சி (மருமகன் - பிரித்தானியா) +447983421889, +447480847921.
சாந்தன் (மகன் - பிரித்தானியா) +447404025592.
நந்தன்(மகன் - இலங்கை) +94771091554.
ரவி (மகன் - பெல்ஜியம்) +32465790907.
ஜெயா (மகன் - கனடா) +16476187922.

# அம்பாறை தமிழரின் இருப்பு கேள்விக்குறியானால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன்!

## மே தினக் கூட்டத்தில் கோடீஸ்வரன் எம்.பி.

அம்பாறை,மே 03

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்படுமானால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன்.

-இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை ஆலையடிவேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சியை உருவாக்கிய தமிழ் மக்களுக்கான உரிமை தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு- கிழக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு இந்த நல்லாட்சி அரசால் எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொழிலாளர்கள் நிர்க்கதியாக நடுவீதியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதுமாத்திரமின்றி தொழிலாளர்களின் பெறுமதிமிக்க காணிகள் அரசால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலை மாற வேண்டும். அம்பாறை மாவட்ட மக்களின் இருப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

யுத்தத்தில் பதிக்கப்பட்ட மக்களுக்கு சரியாக நஷ்டஈடு வழங்கப்படவில்லை. முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் இன்றைய வாழ்க்கைச் சுமையைச் சமாளிப்பதற்கு அன்றாடம் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களுக்கான நலத்திட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் தங்களின் குடும்பங்களுடன் இணைந்து வாழ வேண்டும். அதற்கு அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வையும் எமது மக்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடிய சமஷ்டி முறையிலான அரசமைப்பையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். கடந்தகால கசப்புணர்வுகளை யாவரும் மறந்து, அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து எமது உன்னத நோக்கத்துக்காகப் பாடுபட முன்வரவேண்டும். - என்றார். (ச)

# ஐ.நாவுக்கு பிரச்சினையை எடுத்துச் செல்வோம்

## மாயக்கல்லிமலை விவகாரம் குறித்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணித் தலைவர்

அம்பாறை, மே 03

அம்பாறை இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாயக்கல்லிமலைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்புத் தொடர்பில் அரசு உரிய தீர்வை வழங்காவிடின், ஐக்கிய நாடுகள் சபையில் இந்தப் பிரச்சினையை முன்வைப்பதற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நடவடிக்கை எடுக்கும்.

-இவ்வாறு அந்தமுன்னணியின் தவிசாளர் எம்.எம்.அப்துல் றஹ்மான் தெரிவித்தார்.

மாயக்கல்லிமலைப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினர் விஜயம் செய்தனர். இதனை அடுத்து, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினருக்கும் இறக்காமம் பிரதேச முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு அங்கு நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாயக்கல்லிமலை விவகாரத்தால் சிறுபான்மையின மக்கள் அச்சமடைந்துள்ளனர். நல்லாட்சி அரசின் மீதும் நம்பிக்கை இழந்து வருகின்றனர். இப்பிரச்சினைக்கு ஆரம்பத்தில் தீர்வு வழங்கப்பட வேண்டும். இந்த விவகாரம் பிற்காலத்தில் மிகப்பெரிய இனவிரிசல் ஏற்படுவதற்குக் காரணமாகிவிடும்.

இன நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசும், பொலிஸாரும் சட்டத்தையும், நீதியையும் உரிய முறையில் கடைப்பிடித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு வழங்க முன்வர வேண்டும். -என்றார். (ச)

## புடவைக்கட்டு முஸ்லிம் வித்தியாலயத்தில்

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க கோரி ஆர்ப்பாட்டம்!

குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புடவைக்கட்டு முஸ்லிம் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி அவ்வித்தியாலய மாணவர்களும் பெற்றோரும் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தவை வருமாறு-

253 மாணவர்கள் கல்வி பயின்று வரும் இந்த வித்தியாலயத்தில் 7 ஆசிரியர்கள் மாத்திரமே கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வித்தியாலயத்துக்கு இன்னும் 9 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையே இந்த வித்தியாலயத்தில் அதிகமாக நிலவுகின்றது. இது தொடர்பில் பலதடவைகள் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. - என்றனர்.

# தகவலறியும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டமை ஊடகத்துறைக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம்!

அம்பாறை,மே 03

எமது நாட்டில் தகவலறியும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டமை ஊடகத்துறைக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம் ஆகும்.

-இவ்வாறு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் மீரா எஸ்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அட்டாளைச்சேனை ஒஸ்றா கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் தகவல்களை வழங்க முன்வர வேண்டும். ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புடன் பக்கச்சார்பின்றி, நம்பகத்தன்மையான செய்திகளை வழங்க வேண்டும். இதன் மூலம் சிறந்த அடைவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஏறாவூர் நகரசபையில் 74 ஊழியர்களுக்கு மீள் நியமனங்கள்!

ஏறாவூர் நகர சபையில் ஒப்பந்தக் காலம் முடிவடைந்த 74 ஊழியர்களுக்கு மீள் நியமனங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளன என நகரசபைச் செயலாளர் எச்.எம்.எம். ஹமீம் தெரிவித்தார்.

இவர்களின் ஒப்பந்தக் காலம் கடந்த ஏப்ரல் முதலாம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், இந்த 74 ஊழியர்களும் மீளவும் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்த மற்றும் பதிலீட்டு அடிப்படையில் ஊழியர்களாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச)

# குளத்தில் மூழ்கி மாணவன் சாவு!

அம்பாறை வாங்காமம் மலை யடிக் குளத்தில் மூழ்கி, ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

ஏறாவூரைச் சேர்ந்த செய்னுலாப்தீன் முஸ்தாக் அஹமட் (வயது-16) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மே தின விடுமுறையில் நண்பர்களுடன் சுற்றுலாவுக்குச் சென்ற பிரஸ்தாப இளைஞன், குளத்தில் நீராடிக் கொண்டிருந்தபோது திடீரென நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குளத்தில் நீராடிய மாணவர்களுக்கு முறையான நீச்சல் தெரிந்திருக்கவில்லை என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

# குப்பை போடுவதைக் கண்டித்து விடுதிக்கல் மக்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு மண்முனை தென்மேற்குப் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட விடுதிக்கல் கிராமத்தில் அமைந்துள்ள குப்பைமேட்டுப் பகுதியில் குப்பை போடுவதைக் கண்டித்து, நேற்றுச் செவ்வாய்க்கிழமை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில், குப்பையுடன் வந்த 2 உழவு இயந்திரங்களும் பிரதேசசபைக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் திருப்பி அனுப்பப்பட்டன.

இதனை அடுத்து, ஆர்ப்பாட்டம் நடந்த இடத்துக்கு வந்த மண்முனை தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் ஜோன்பிள்ளை குமுதா, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

'மேற்படி குப்பை மேட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை திடீரெனத் தீ பரவியமை காரணமாக அங்கு புகை மூட்டமாகக் காணப்பட்டது. இதனால் இங்கு வாழும் பொதுமக்களுக்கு சுவாசிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. மேலும், இந்த இடத்தில் குப்பை கொட்டப்படுகின்றமையால் துர்நாற்றம் வீசுகிறது. மக்கள் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். இனிமேலும் இவ்விடத்தில் குப்பை கொட்டுவதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை.' -என்றனர்.

இதற்குப் பிரதேசசபைச் செயலாளர் பதிலளிக்கையில்-

'2011ஆம் ஆண்டு இந்த இடத்தில் குப்பை கொட்டுவதற்குப் பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைய்டுத்தே, இங்கு குப்பை கொட்டப்படுகின்றது. கழிவுகளை தரம் பிரித்தல் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கப்படுகின்றது. குப்பையை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான வேலைத்திட்டம் 3 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்'.- என்றார்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இ.தொ.காவுடன் இணைந்து எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும்!





## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மே 03

உள்ளூராட்சி தேர்தல் மற்றும் எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களிலும் இ.தொ.காவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து போட்டியிடும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இ.தொ.காவின் மே தின நிகழ்வு கினிகத்தேனை நகரில் பிரதான பஸ்தரிப்பிடத்திற்கு அருகில் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2020 ஆம் ஆண்டு இந்த நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய தனி ஆட்சியை அமைக்கும். இந்த நாட்டில் எத்தனை அரசு அமைத்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் தான் ஆறுமுகன் தொண்டமான் இணைந் திருப்பார்.

நாம் ஆறுமுகத்தை கைவிட மாட்டோம். ஆறுமுகனும் எம்மைக் கைவிடமாட்டார் என்பது உறுதி. எதிர்வரும் காலங்களில் ஆறுமுகன் தொண்டமானுக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினூடாகச் சிறந்த அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படும்.

மலையக மக்களுக்குச் சிறப்பான சேவையைச் செய்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜனஐக்கிய முன்னணியும் தான்.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர உரையாற்றியவை வருமாறு:-

2020 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் உருவாகும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸை நம்பி வாழும் மலையக மக்களுக்கு வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படும்.

ஜனாதிபதியின்விசேடபணிப்பின் கீழ் இ.தொ.காவின் மேதின விழாவிற்கு வருகை தந்தமை எமக்கு பெரும் மகிழ்ச்சி. சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பேரணியில் நடந்து வந்து இம் மேதின கூட்டத்தில் கலந்துகொண்டமையிட்டும் மகிழ்ச்சி எமக்கு.

இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொண்டர்களாக இ.தொ.காவுக்கு ஆதரவாக இருக்கின்றமையை எண்ணிப் பெரு மைப்படுகின்றோம். அமரர். தொண்டமானின் காலத்தில் ஒரு ரூபா சம்பள உயர்வு முதல் மலையக மக்களுக்கு வாக்குரிமையைப் பெறுவதாக இரவு பகலாகப் பாடுபட்டவர் தொண்டமான்.

இன்று 10 வருடங்களுக்கு மேலாக மலையக மக்களின் தேவையை ஒரு சில்லறை காசுக்கு கூட அடிபணியாது விலைபோகாத நிலையில் ஆறுமுகன் தொண்டமான் முன்னெடுக்கின்றார்.

எதிர்காலத்தில் மலையக மக்கள் சுபீட்சம் பெறுவதற்கு இந்தநாட்டின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து செயற்பட இ.தொ.காவும் துணை நிற்கின்றது.

ஆகையால், மலையக மக்கள்கஷ்டப்பட்டேனும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து எதிர்காலத்தில் சுபீட்சமான வாழ்க்கையை வாழ வழி சமைக்க வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் இ.தொ.கா பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் உரையாற்றியவை வருமாறு:-

தோட்டத் தொழிலாளர்கள் என்றும் தொழிலாளர்களாக இருக்க முடியாது அவர்களும் எதிர்காலத்தில் சிறுதோட்ட முதலாளிகளாக வேண்டும்.

தோட்டப்பகுதிகளில் தொழிலாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்.

அதேவேளையில், தோட்ட உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகளை காங்கிரஸ் மேற்கொள்ளும்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 12ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இவரின் வருகையை முன்னிட்டு தனிப்பட்ட நபர்கள் மார்தட்டி கொள்ள முடியாது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் பல இடங்களில் மே தினக் குப்பை கூளங்கள்!



கொழும்பு, மே 03

கொழும்பில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களுக்கு வெளிப் பிரதேசங்களிலிருந்து வருகை தந்த பல்லாயிரக் கணக்கானவர்கள் பயன்படுத்திய தண்ணீர் போத்தல் மற்றும் ஏனைய பொலித்தீன் பொருள்களால் கொழும்பு நகரின் பல பகுதிகள் குப்பை மேடுகளாகக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மே தினக் கூட்டம் நடத்தும் உரிமை நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் உள்ளது.

ஆனால், தற்பொழுது கொழும்பில் ஏழுந்துள்ள குப்பை மற்றும் கழிவுப் பொருள்களை அகற்றும் பிரச்சினைக்கு தீனியாக இந்த மே தினக் குப்பைகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிறிகொத்தா மீது துப்பாக்கிச் சூடு: கைதானார் பொலிஸ் கான்ஸ்டபிள்!



கொழும்பு, மே 03

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் உள்ள யானை சின்னத்தின் மீதே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சு செயலாளரின் புறக்கோட்டை, எபிட்டமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளே இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கடமைக்குச் சென்று கொண்டிருக்கும் போது, இந்தக் கொன்ஸ்டபிள் தனது உத்தியோகபூர்வ துப்பாக்கி மூலம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் என்றும் தற்போதுவரையில் தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர்மீண்டும்வழமையை போல் அந்த செயலாளரின் வீட்டிற்குச் சென்று அவர் கடமையில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையிலேயே, மேற்படி கொன்ஸ்டபிள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அவரிடம் மனநல மருத்துவ அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளப் படவுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி குப்பை மேட்டில் எரிவாயு அச்சுறுத்தல்!

கொழும்பு, மே 03

கண்டி நகரில் உள்ள கொஹா கொடா குப்பை மேட்டில் எரிவாயு அச்சுறுத்தல் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பேராதனை பல்கலைக்கழகத்தின் நிபுணர்களின் உதவியுடன் இந்தக் குப்பைமேடு பரிசோதிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையை அடுத்து உடனடியாக ட்ரோன் கமரா பயன்படுத்தி இந்த குப்பை மேட்டை ஆய்வுசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர பைஸர் முஸ்தபாவால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது.

# குப்பை அகற்றிய ஐ.தே.க. ஆதரவாளர்கள்!



கொழும்பு, மே 03

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின பொதுக்கூட்டத்தின் போது பெருமளவான ஆதரவாளர்கள் ஒன்றுதிரண்டு குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

இந்த செயற்பாடு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று மாற்றமாக கருதப்படுகின்றது. அது மட்டுமன்றி, இந்தச் செயல் பார்வையாளர்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

## ஹெரோயினுடன் இருவர் கைது!

கொழும்பு, மே 03

ஹெரோயினுடன் இருவர் கொழும்பில் வெவ்வேறு இடங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் மருதானையில் கைது செய்யபட்ட சந்தேக நபரிடம் இருந்து 5 கிராம் 480 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவரை மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 3 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் பேலியகொடை - நுகேபார வீதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்பேலியகொடைபகுதியைச் சேர்ந்த 30 வயதான ஒருவர் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 03.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் அஷ்டமித்திதி இரவு 7.51 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ. 4.28 மணி வரை. பின்னர் மகம். மரணயோகம் இரவு 7.51 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 12.07 மணி முதல் 1.40 மணி வரை. சுபநேரம்: மாலை 4.23 மணி முதல் 5.53 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத வளர்பிறை அஷ்டமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ஆயிலியம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** தீமையான நாள். வருமானம் நலிவடையும். உடலில் ரோகங்கள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிக வேலைப்பளுவைச் சுமக்க நேரும். தொழிலாளர்களுக்கு உழைப்பும், பாடுபட்டதன் பலனும் குறையும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் நல்லவரவும் செலவும் சரளமானபோக்கும் காணப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் ஏற்றமடைவார்கள். வியாபாரிகளுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். வேலைக்குப் போகும் பெண்கள் இடமாறுதல், அதிக ஊதியம் எனப்பெற வாய்ப்புள்ளது.

**கடகம்:** அனுகூலமான நாள். வருமானம் வளமடையும். தொழிலில் இருந்து வந்த நெருக்கடி அகலும். புதியதொழில் தொடங்குவதற்கு உகந்த நாள் ஆகும். இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்றிணைய வாய்ப்புண்டாகும்.

**சிம்மம்:** சஞ்சலம் மிகுந்த நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. போக்குவரத்தில் பணத்தைப் பத்திரமாக பார்த்துக்கொள்ளவேண்டும்.

**கன்னி:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். வியாபாரத்தில் அபரிமிதமான லாபம் கிடைக்கும். தொழில் கலைஞர்கள் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். விரோதியும் நண்பராவர். மனைவி மூலம் தனவரவு உண்டாகும்.

**துலாம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். தொழிலில் புது யுக்திகளைக் கையாளுவார்கள். பிரிந்தவர்கள் ஒன்றுசேர்வார்கள். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள்.

**விருச்சிகம்:** இன்பமான நாள். தாதன்ய விருத்தி கிட்டும். குடும்பத்தில் இருந்த மனவேற்றுமை அகலும். எதிர்பார்த்த பொருளுதவி கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றிதரும்.

**தனுசு:** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் வீண்தகராறுகள் உண்டாகும். பிரயாணத்தின் போது உடமைகள் தொலைந்துபோகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். ஆடம்பரச்செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் மத்திமலாபம் கிடைக்கும். தொழிலில் அலைச்சலும், கஷ்டமும் அதிகமாகும்.

**கும்பம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும். தீர்க்கப்படாத பிரச்சினை தீரும். பூர்வீக சொத்து கைக்கு வந்து சேரும். புதிய வீடு, வாகனம் வாங்க முதலீடு செய்வார்கள்.

**மீனம்:** நன்மையான நாள். பொருளாதாரம் திருப்தியைத்தரும். இதுவரையும் தடைப்பட்டது கிடைக்கும். நீண்டகாலம் நோயால் அவதிப்பட்டவர்கள் ஆரோக்கியமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இத்தினத்தில் நற்கருமங்களில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# கொரியாவில் மோதல் ஏற்பட்டால் இலங்கையரை பாதுகாக்க நடவடிக்கை!

கொழும்பு, மே 03

வட கொரியா மற்றும் தென் கொரியாவுக்கு இடையில் மோதல் ஏற்பட்டால் அங்கு வாழும் இலங்கை யர்களைப் பாதுகாக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கானவேலைத்திட்டம் ஒன்றை வெளிவிவகார அமைச்சும் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் ஆகியன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளர்களின் விசேட கோரிக்கைகளுக்கமைய கொரிய தூதுவரால் இது தொடர்பில் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

மோதல் நிலைமைகள் ஏற்பட்டால் அதன் பாதிப்பை குறைத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இலங்கையர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தூதுவர் ஊடாக அவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், கொரியாவில் மீன்பிடிப் பிரிவில் தொழில் வாய்ப்புகள், ஏனைய நாடுகளை விடவும் இலங்கைக்கு அதிகமாகக் கிடைத்துள்ளது.

அந்தத் தொழிலுக்காகச் செல்லும் இலங்கை பணியாளர்களுக்கு கொரிய கால நிலைக்கு பழகிக் கொள்ளும் வகையில் இலங்கை யில் விசேட பயிற்சி வழங்குவ தற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு நடவ டிக்கை மேற்கொண்டுள்ளது.

## சிலாபம் கடற்கரையில் அலையில் அள்ளுண்ட பெண்களில் மூவர் மீட்பு!

சிலாபம், மே 03

சிலாபம் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த 4 பெண்கள் நேற்றுமுன்தினம் மாலை இராட்சத அலையில் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் கடற்கரையில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராட்சத அலையால் இழுத்துச் செல்லப்பட்ட நான்கு பேரில் மூன்று பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

எனினும், 21 வயதுடைய பெண் ஒருவர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகிறார்.

அவர்கள் சிலாபம் - இலிப்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.




காணாமற் போன பெண்ணைத் தேடி பொலிஸார், கற்பிட்டிக் கடற்படை அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## வீதியின் மிகுதிப் பணி எப்போது? கேள்வி எழுப்பும் பிரதேச மக்கள்

வரணி, மே 03

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி, ஒரு பகுதி வேலைகள் சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றன மீதி வேலைகள் முடங்கிய நிலையில் உள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, வீதியின் ஏனைய பகுதி வேலைகள் எப்போது முன்னெடுக்கப்படும் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறிப்பாக ஜே/339 கிராம சேவையாளர் அலுவலகத்தில் இருந்து அரை மைல் தூரம் மிகவும் சேதமான நிலையில் உள்ளது. அந்த வீதியால் பாடசாலை மாணவர்கள் மற்றும் போக்குவரத்துச்செய்யும் பயணிகள் மழை காலங்களில் மிகவும் பாதிக்கப்படுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

அந்த வீதியில் தான் கிராம சேவையாளர் அலுவலகம், முன் பள்ளி பாடசாலை, பனை தென்னை வள கூட்டுறவு சங்கம் ஆகியன அமைந்துள்ளன. எனவே, பெரும்பாலான மக்கள் அந்தப் பகுதியால் பயணிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் நடப்பு ஆண்டு மாரி காலத்துக்கு முன் வீதியின் மீதி வேலைகளையும் திருத்தம் செய்தால் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (எ-25)

## இந்தியா—ஜப்பான் கூட்டில் இலங்கையில் திரவ எரிவாயு மின் உற்பத்தி நிலையம்

கொழும்பு, மே 03

இந்தியாவும் ஜப்பானும் இணைந்து இலங்கையில் திரவ எரிவாயு மின்னுற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உடன்படிக்கை இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

இதன்படி கெரவலப்பிட்டிய பகுதியில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அந்த மின்னுற்பத்தி நிலையத்தில் இருந்து 500 மெகாவாற் மின்சாரத்தைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இறந்த நிலையில் 50 அடி நீளமான ராட்சத திமிங்கிலம் கரை ஒதுங்கியது!

கொழும்பு, மே 03

வெலிகம, கும்புருகம கடல் பகுதியில் பெரிய திமிங்கிலம் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 50 அடி நீளமான இந்தத் திமிங்கிலம் நேற்று முன்தினம் இரவு கரை ஒதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திமிங்கிலத்தின் உடலின் பல இடங்களில் பெரியளவிலான வெட்டுக் காயங்கள் உள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.


பெரிய படகு ஒன்றுடன் மோதுண்டமையால் காயமடைந்து அது உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.




மிரிஸ்ஸ வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் அந்தத் திமிங்கிலத்தை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

காலைக்கதிர்





# அமெரிக்காவின் நகர்வும் இந்தியாவின் ஆர்வமும்...!

**லோகன் பரமசாமி**

இலங்கையின் அரசியல் போக்கில் கீழிருந்து மேலாக அரசை மக்கள் ஏற்றுக் கொள்ள வைக்கும் பொறிமுறையை உருவாக்கும் அதேவேளை, மேலிருந்து கீழான பொறிமுறையை உருவாக்கும் பொருட்டு இலகு கடன் வசதி, வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு மற்றும் அதிகாரக் கட்டமைப்புகளை அமைக்க வசதி செய்தல், போன்ற திட்டங்களை உருவாக்குவதன் ஊடாக மேலைத்தேய அரசுகள் தமது மூலோபாய மேலாதிக்க நலன்களை பெற்று கொள்ள முனைவதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த வகையில் சற்றுப் பரந்த அளவில் தெற்காசிய வல்லரசான இந்தியாவின் நிலை குறித்த மாற்றங்களைத் தொடர்ந்தும் பார்க்கலாம்.

உலகில் அரசுகளும் அவற்றின் கொள்கைகளும் மாற்றங்களைக் காணும் அதேவேளை, அரசுகளின் ஐய உணர்வும் அதனால் உருவாகக் கூடிய அதி உச்ச அதிகாரத்தின் மீதான நாட்டமும், அதை அடைவதற்கான சொந்த முயற்சியும், பிரிக்க முடியாத நிரந்தரக் கோட்பாடுகளை வெளிக் கொணர்ந்துள்ளன.

அதாவது ஒவ்வொரு அரசும் தனது பாதுகாப்பை முக்கிய பண்பாக கொண்டுள்ளது. வல்லரசுகள் ஏகாதிபத்தியத்தை நோக்காகக் கொண்டே செயற்படுகின்றது. ஏகாதிபத்தியப் போட்டி அரசுகள் அதி உச்சப் பாதுகாப்பை அடைவதில் இடைவிடாது நாட்டம் கொண்டியங்குகின்றன.

யதார்த்தவாதக் கோட்பாடுகளின் அடிப்படையில், அனைத்து விடயங்களையும் ஆளும் அரசு ஒன்று உலகில் இல்லை. இதனால் அடாவடித்தனமே ஒழுங்காக ஆட்சி செய்கிறது. சிக்காகோ பல்கலைக்கழக பேராசிரியர் ஜேன்மேசைமர்னின் கோட்பாட்டு வரைவுகளுக்கு அமைய வல்லரசுகள் ஊகங்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

அரசுகள் ஒன்றுக்கொன்று எதிராகவே செயற்படுகின்றன. சில அரசுகள் பாதுகாப்புப் படைகளை அதிகம் வைத்திருப்பது இன்னமும் ஆபத்தானவையாக அமைகிறது. இதனால் இதர அரசுகளும் தமது பாதுகாப்பைப் பலப்படுத்த முனைகின்றன.

அரசுகள் மற்றைய அரசுகளின் இச்சை குறித்து நிச்சயமற்றவையாக உள்ளமையால் எதிரி தம் மீது படையெடுக்கும் எண்ணம் உள்ளதா - இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வது கடினமானது. அறுபதுகளில் சீனா, திபெத்திய நிலப்பரப்பினுள் படை எடுத்த காலம் தொட்டு, இந்தியா, சீனப் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்து ஐயம் கொண்ட நிலையே உள்ளதை இங்கு ஒப்பிடலாம்.

அதேவேளை, சீனப் பொருளாதார மென்பலவளர்ச்சியும் ஆசிய ஆபிரிக்க பிராந்தியத்தில் கடும் செல்வாக்கு செலுத்துவது தெற்காசிய பிராந்தியத்தில் இந்திய ஏகபோகத்தை சிக்கலுக்குள்ளாக்குவதாகப் பார்க்கப்படுகிறது.

இந்தியா இந்த நிலையை சுதாகரிக்கும் பொருட்டு அமெரிக்க ஆதரவை நாடி நிற்கிறது. மேலும் தனது பாதுகாப்பை மிக விரைவாக வலுவடையச் செய்வதில் நாட்டம் கொண்டிருக்கிறது. பிரித்தானியா, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் தத்தமது ஆயுத விற்பனை அறிக்கைகளில் தமது முதல்தர ஆயுதக் கொள்வனவாளராக இந்தியாவையே சுட்டிக் காட்டுகின்றன.

இதனால் இந்திய ஆய்வாளர்கள் தமது நாட்டுக்கு மேலைத்தேய நாடுகளின் உதவியும் ஒத்துழைப்பும் பல்வேறு துறைகளிலும் தேவை என்பதை பார்வையாகக் கொண்டுள்ளனர். ஆனால், அண்மைய மாற்றங்கள் புதிய திருப்பங்களுக்கு வகை செய்யுமா என்பது கேள்வியாக உள்ளது.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலை தொடர்ந்து இராஜ தந்திரத் தொடர்புகள் சற்று இளகிய தன்மையைப் பெற்றிருப்பதை இந்தியா உணர்ந்து கொண்டுள்ளது. கடந்த பத்து வருடங்களில் இந்திய -அமெரிக்க உறவு பூகோள மூலோபாய பங்காளிகள் நிலையை எட்டி இருந்தது.

இரு தரப்பாலும் பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களும், இரு தரப்பு, பிராந்திய, உலகப் பிரச்சினைகள் மீதான நலன்களும் இரு தரப்பிடையேயும் பகிர்ந்து கொள்ளப்பட்ட அரசியல் பயணங்களும் இந்திய - அமெரிக்க உறவைப் பரந்த அளவில் என்றுமில்லாதவாறு புதிய சிற்பவடிவமைப்பாக மாற்றி இருந்தது.

இந்த உறவு பல்வேறு துறை சார்ந்ததாகவும் குறிப்பாக வர்த்தகம் நிதி முதலீடு, பாதுகாப்பு, கல்வித்துறை, விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், இணையப் பாதுகாப்பு, பொது அணு உற்பத்தி, தொழில்நுட்பம், விண்வெளி தொழில் நுட்பம், மென் பொருள் உற்பத்தி, சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் என்று எண்ணுக்கணக்கில்லாத வகையில் இந்திய - அமெரிக்க இணைவு மேன்மை கண்டு வந்தது.

அமெரிக்காவின் வளர்ச்சியை தனது அளவு கோலாகக் கொண்டு, வளர்ச்சியின் எல்லைகளாக வகுக்கும் தன்மையைப் பொதுவாக சனத்தொகை கூடிய நாடுகள் அனைத்தும் கொண்டிருக்கின்றன. தெற்காசியாவில் சீனசெல்வாக்கு அதிகரித்தவண்ணமே இருக்கும் போது இந்திய, அமெரிக்க தொடர்பும் தமது சமூக பொருளாதார வளர்ச்சியும் முக்கியமானதாக இந்திய அரச அதிகாரிகள் பார்க்கின்றனர். தெற்காசியாவிலே தனது மேலாண்மையைப் பேணும் வகையில் இந்திய சமூக பொருளாதார மாற்றங்களை அமெரிக்க சமூக பொருளாதார நிலைக்கு ஏற்ப மாற்றுவது என்பது இந்தியத் தலைமைத்துவங்களின் கனவாக இருந்தது.

*அமெரிக்காவில் தகவல் தொடர்பு நிறுவனங்களை வைத்திருக்கும் இந்திய நிறுவனங்கள் வேலையாள்களுக்கான நுழைவு அனுமதி மறுக்கப்படும் இடத்து பெரிய நிதி இழப்பும் வேலை இழப்பையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்படலாம் என்பது பார்வையாக உள்ளது.*

புதிய அமெரிக்கத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் பிரசாரங்களின் போது அமெரிக்க தொழிற்சாலைகள் மூடப்படுவது குறித்தும் அமெரிக்க வேலைகளை கிழக்கு நாடுகள் கொள்ளை இடுவது குறித்தும் ஆக்ரோஷமாக கூச்சல் இட்டிருந்தார். சீனா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் அமெரிக்க உற்பத்தி, வேலை வாய்ப்பை எடுத்துச் செல்வதால் அமெரிக்க தாய் நாட்டு கைத்தொழில் பேட்டைகள் மூடப்பட வேண்டி ஏற்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தியத் தொழிலாளர்கள் அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் முக்கிய பங்கு வகிப்பதால், அந்தத் துறையில் முக்கிய பாத்திரம் வகிக்கும் நிறுவனங்களான Infosys, Wipro, HCL Technologies ஆகியன ஏற்கனவே குறைந்த சம்பளச் செலவில் வேலை செய்யக் கூடிய இந்திய தொழிலாளர்களுக்குப் பதிலாக அதிகமாக உள்நாட்டுச் சம்பளம் பெறும் அமெரிக்க தொழிலாளர்களை மாற்றிப்போட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து ட்ரம்ப் வெற்றி பெற்றதில் இருந்து தொலைபேசி வாயிலாக வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டதைத்தவிர இந்திய பிரதமர் மோடி, இராஜ தந்திர தொடர்பாடல்கள் எதுவும் வைத்திருக்கவில்லை. ட்ரம்ப் சர்வதேச இராஜதந்திரத்தில் ஆர்வம் செலுத்தாத நிலையும், தனது அரச நிர்மாணப் பணிகளில் பல்வேறு சிரமங்களைக் கொண்டிருந்ததும்தான் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் இந்திய - அமெரிக்க உறவை உறுதி செய்யும் வகையில் பல்வேறு தரப்பிலும் இருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் புலம்பெயர் இந்தியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. தேர்தல் பிரசார காலங்களில் குடியரசுக் கட்சி இந்து தொண்டு நிறுவனம் வைத்திருந்த வரவேற்பு கூட்டத்தில் ட்ரம்ப், தான் ஒரு இந்து மத ரசிகன் என்றும் இந்தியாவின் மிகப்பெரிய ரசிகன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியா குறிப்பிட்ட ட்ரம்ப்பின் குணாதிசயம் எவ்வளவு சாதகமானது என்பதைக் கணிப்பிடும் ஆய்வாளர்கள், புதிதாக பதவியேற்றதன் பின்பு ஆறு இந்திய - அமெரிக்கர்களைத் தனது நிர்வாகப் பணிகளில் இணைத்து கொண்டமையைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். இது புலம் பெயர் இந்தியர்கள் தமது சொந்த நலன்களையும் பதவிகளையும் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, இந்திய அமெரிக்க நிலைப்பாட்டை நழுவ விடாது கவனித்துக் கொள்வதில் கவனமாக இருப்பதையும், இந்தியா - அமெரிக்க உறவை



பல மடங்கு அதிகரித்து கொள்வதில் மிக ஆர்வமாக இருப்பதையும் எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனாலும் ட்ரம்ப்பின் பொருளாதாரக் கொள்கையான பாதுகாப்புவாத தேசியவாத பொருளாதார போக்கானது, தகவல் தொடர்புத் தொழில் நுட்ப வேலையாள்கள் 350 000 பேரின் வேலையும் 150 பில்லியன் டொலர் இந்திய வருமானமும் கேள்விக்கிடமாக இருப்பவையாகவே கணிப்பிடப் பட்டுள்ளன.

அமெரிக்காவில் தகவல் தொடர்பு நிறுவனங்களை வைத்திருக்கும் இந்திய நிறுவனங்கள் வேலையாள்களுக்கான நுழைவு அனுமதி மறுக்கப்படும் இடத்து பெரிய நிதி இழப்பும் வேலை இழப்பையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்படலாம் என்பது பார்வையாக உள்ளது.

ஊகங்களையும் சந்தேகங்களையும் நம்பி அமெரிக்காவுடனான இந்திய வெளிவிவகாரக் கொள்கை சென்று கொண்டு இருக்கும் அதேவேளை, சீன பொருளாதார வளர்ச்சியும், செல்வாக்கும் தெற்காசிய அயல் நாடுகளில் அதிகரித்திருப்பது இந்திய நிலைப்பாடுகளுக்கு ஏற்புடையதாக இந்திய ஆய்வாளர்கள் கருதவில்லை.

இந்த நிலையில் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் படுகொலைகளாக பார்க்கப்படும் ஈழத்தமிழர் படுகொலை மாதத்தில் வெசாக் விளக்கேற்ற இந்தியப் பிரதமர் இலங்கை வருகின்றமையும் சிந்திக்கத்தக்கது.

(நன்றி: புதினப்பலகை)

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 167

பொன்.வேணு கிருஷ்ணா

சிரியாவுக்கு எதிராய் அந்நாட்டு அரசாங்கத்தின் வான் தளத்திற்குள் 59 கப்பல்தள ஏவுகணைகளை ஏவி குறைந்தபட்சம் 15 சிரியர்கள் -இவர்களில் பெரும்பான்மையோர் அப்பாவி மக்கள்- கொல்லப்படக் காரணமாக அமைந்த இராணுவ மூர்க்கத்தனத்தின் ஒரு அப்பட்டமான நடவடிக்கையை அமெரிக்கா நடத்தி முடித்து வெறும் ஒரு வார காலம் தள்ளி இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல் வந்திருக்கிறது.

**அந்தத் தாக்குதலானது சிரிய அரசாங்கம் நடத்தியதாகப் பழி போடப்பட்ட ஓர் இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கான பதிலடியாகக் கூறி நியாப்படுத்தப்பட்டது**

இதுபோன்ற எந்த ஆயுதத்தை யும் பயன்படுத்தியதை சிரியா மறுத் தது, மேற்கத்திய ஊடகங்கள் முடிவில்லாமல் பொய்கள் கூறி வந்தாலும், சிஐஏ ஆலும் சிரியாவில் அது ஆதரிக்கும் அல்குவைதா தொடர்புடைய போராளிகளாலும் அரங்கேற்றப்பட்டதாக இருக்கும் ஒரு ஆத்திரமூட்டலாக அது இருப்பதை நோக்கியே புற ஆதாரங்கள் அனைத்தும் கைகாட்டுகின்றன.

சிரியாவில் இட்டுக்கட்டப்பட்ட இரசாயன ஆயுதத் தாக்குதல் குறித்து அமெரிக்க அரசாங்கமும் ஊடகங்களும் இடைவிடாது போர்ப்பிரசாரத்தை கக்கிக் கொண்டிருந்த நிலையிலும் கூட, அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது தனது மிகப்பெரும் அணு-சாரா ஆயுதத்தைப் பிரயோகிப்பதற்காய் தயாரிப்புச் செய்து கொண்டிருந்தது.

''இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் பலியாவதைத் தவிர்ப்பதற்கான ஒவ்வொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் தான் எடுத்ததாக பென்டகன் கூறியுள்ளது. மத்திய கிழக்கெங்கிலும் மில்லியன் கணக்கான மக்கள் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கூறப்படுவதான இத்தகைய வாக்குறுதிகள் கொஞ்சமும் பயனற்றவையாகும். ஆரம்பக்கட்ட செய்திகளின் படி, குறி வைக்கப்பட்ட பகுதியின் அருகில் பல கிராமங்கள் உள்ளன, கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை பெரிய அளவில் இருப்பதற்கு அத்தனை சாத்தியங்களும் உள்ளன.

இத்தருணத்தில், இந்தத் தாக்குதலில் விளைந்த உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை என்ன என்பது ஒருவருக்கும் தெரியவில்லை, அமெரிக்க ஊடகங்களிடம் விட்டால், அது ஒருவருக்கும் சொல்லப்படாமலேயே போய் விடும். நியூயோர்க் டைம்ஸ் போன்ற சிஐஏ தரப்பு அங்கங்களது தலையங்க ஆசிரியர்களும் சிரியாவில் இரசாயன ஆயுத ஆத்திரமூட்டல் விடயத்தில் அசாத் ஆட்சியின் மீதான அரசின் கண்டனங்களை அப்படியே ஒப்பித்த தொலைக் காட்சி செய்தி அலசல் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களும் ஆப்கானிஸ்தானில் பெரிய அமெரிக்க குண்டு வீசப்பட்டதில் ஏற்பட்ட உயிரிழப்புப் பற்றி முழுமையாக அலட்சியமாக இருக்கின்றனர்.

**''வீடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பள்ளிகளும் சுகாதார மையங்களும் சேதப்படுத்தப் பட்டுள்ளன, மின்சாரம் தண்ணீர் நிலையங்கள் உள்ளிட்ட முக்கியமான பொது உள்கட்டமைப்புக்கள் நாசப்படுத்தப்பட்டுள்ளன'' என்கிறது அந்தச் செய்தி. இந்த அழிவு 3லட்சத்துக்கும் அதிகமான மக்களை வீடிழந்த அகதிகளாக மாற்றியிருக்கிறது.**

இதேபோல, ஈராக் மற்றும் சிரியாவின் மக்கள் மீது அமெரிக்காவின் குண்டுகளும் ஏவுகணைகளும் நிகழ்த்துகின்ற படுகொலைகளையும் ஊடகங்கள் பெரும்பாலும் உதாசீனம் செய்கின்றன. புதன்கிழமையன்று, மேற்கு மொசூலில் நடந்த அமெரிக்காவின் ஒரு வான்தாக்குதலில் 1.3 பேர் கொல்லப்பட்டனர், 17 பேர் காயமடைந்தனர், இவர்களில் பலர் படுகாயமடைந்திருந்தனர். அதே நாளில், ஈராக் நகரத்தின் மீதான அமெரிக்காவின் முற்றுகையால் ஏற்பட்டிருந்த ஒரு நாசத்தை ஐ.நா முகமை ஒன்று விவரித்திருந்தது, ஆயிரக்கணக்கில் இல்லையேல் குறைந்தபட்சம் நூற்றுக் கணக்கிலேனும் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் மரணமடைந்திருக்கின்றனர்: ''வீடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பள்ளிகளும் சுகாதார மையங்களும் சேதப்பட்டுள்ளன, மின்சாரம் தண்ணீர் நிலையங்கள் உள்ளிட்ட முக்கியமான பொது உள்கட்டமைப்புக்கள் நாசப்படுத் தப்பட்டுள்ளன'' என்கிறது அந்தச் செய்தி. இந்த அழிவு 3லட்சத்துக்கும் அதிகமான மக்களை வீடிழந்த அகதிகளாக மாற்றியிருக்கிறது.



இதனிடையே, வடக்கு சிரியாவில், அமெரிக்க போர் விமானங்கள் நடத்திய ''சொந்த அணியில் இருந்தான'' வான்தாக்குதலில் 18 குர்து போராளிகள் கொல்லப்பட்டனர், அதேநேரத்தில் அமெரிக்கக் குண்டு ஒன்று அல் குவைதாவின் ஆயுதக் கிடங்கு ஒன்றை தாக்கியதில் இரசாயனப் பொருள்கள் பரவி நூற்றுக்கணக்கிலான அப்பாவி மக்கள் அதில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சிரிய அரசாங்கம் தெரிவித்தது. இந்தச் சம்பவங்கள் எதற்குமே எந்த முக்கியத்துவமான செய்திக்கவனமும் கொடுக்கப்படவில்லை, மாறாக சிரிய அரசாங்கத்தை சிக்க வைக்கின்ற இரசாயனத் தாக்குதலாக சொல்லப்படும் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்களது அறவியல் சீற்றத்தைத் தூண்டி விடும் வேலையை அவை சளைக்காது செய்கின்றன.

''மனித உரிமைகள்'' குறித்து எவரொருவருக்கும் பாடமெடுப்பதற்கோ, அதற்கும் சற்றுக் குறைந்து ''பயங்கரவாத''த்தின் எதிரிகளாகக் காட்டிக் கொள்வதற்கோ இவர்கள் யார்? அமெரிக்க ஏகாதிபத்தியம், தானே சர்வதேச சட்டப்படியான, அதற்கடுத்து சற்றுக் குறைவாய் தார்மீக ரீதியான, எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் முற்றிலும் ஆட்படக் கூடியதில்லை என்பதை மீண்டுமொரு முறை உலகத்திற்கு எடுத்துக்காட்டியிருக்கிறது. உலக அரங்கில் அதன் வன்முறையான மற்றும் கொள்ளையிடும் நடவடிக்கை களானவை அமெரிக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் குற்றவியல் தனமான மற்றும் ஒட்டுண்ணித்தனமான தன்மையின் -''இது டொனால்ட் ட்ரம்ப் என்ற வெறுப்புக்குரிய ஆளுமையில் உருவடிவம் பெற்றுள்ளது''- நேரடி வெளிப்பாடாகும்.

அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து, அங்கே தலிபான் அரசாங்கத்தைக் கவிழ்த்து, தனது சொந்தக் கைப்பாவை ஆட்சியை அமர்த்தி, அதுமுதலாய் இரத்தம்பாய்ந்த போர் மற்றும் ஆக்கிரமிப்பினை தொடர்ந்து நடத்தி வந்திருப்பதற்கு பதினைந்தரை ஆண்டுகளுக்குப் பின்னராக இந்த சமீபத்திய அட்டூழியம் வந்து சேர்ந்திருக்கிறது. வழமை முறையிலான மதிப்பீடுகள் 2001இல் இருந்து ஆப்கானிஸ்தானில் கிட்டத்தட்ட 2லட்சம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று மதிப்பிடுகின்றன, இன்னும் நூறாயிரக்கணக்கானோர் காயமடைந்திருக்கின்றனர்; மில்லியன் கணக்கானோர் அகதிகளாகி இருக்கின்றனர். ஆப்கான் மக்களை அரைக் காலனித்துவ அமெரிக்க மேலாதிக்கத்திற்கு உட்படுத்துவதும் மத்திய ஆசியாவின் எரிசக்தி வளம் செறிந்த பிராந்தியத்தின் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முனைப்பை முன் செலுத்துவதுமே ஆரம்பத்தில் இருந்தே இந்தத் தலையீட்டின் நோக்கமாய் இருந்து வந்திருக்கிறது.

**ஏப்ரல் 14ஆம் திகதி அன்று மாஸ்கோவில் பேச்சுக்கு அழைப்பு**

இந்தக் குண்டுவீச்சுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சமயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆப்கானிஸ்தானில் அமைதித் தீர்வு ஒன்றுக்கு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி அன்று மாஸ்கோவில் பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதையொட்டி இது நடந்திருக்கிறது. சீனா மற்றும் பாகிஸ்தான் உடன் இணைந்து இந்தக் கூட்டத்திற்கு ரஷ்யா அழைப்பு விடுத்திருந்தது, இந்தியா மற்றும் ஈரான் உள்ளிட்ட ஒன்பது பிற நாடுகளும் பங்கேற்க யோசனை வைக்கப்பட்டது. பேச்சுவார்த்தையில் தாங்களும் கலந்து கொள்ளக் கூடும் என தலிபான்கள் சைகை காட்டியிருந்தனர். அழைப்பு விடுக்கப்பட்ட போது பங்கேற்பை உறுதிசெய்ய அமெரிக்கா தவறியது என்பதோடு, தலிபான்களுக்கு ரஷ்யா ஆதரவளிப்பதான அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை அமெரிக்க இராணுவத் தளபதிகள் தொடர்ந்து செய்து வந்திருக்கின்றனர்.

சிரியாவின் வான்பகுதியிலோ, வட கொரியாவுக்கு எதிரான இராணுவத் தாக்குதலின்போதோ அல்லது ரஷ்யாவின் மேற்கு எல்லைகள் மீதான ஒரு ஆத்திரமூட்டலின் போதோ அமெரிக்க மற்றும் ரஷ்ய போர் விமானங்கள் இடையே ஓர் ஆயுத மோதல் நடைபெறுமாயின், ஆப்கானிஸ்தானில் விழுந்த ஆயுதத்திற்கு அடுத்த படியாக, ஒரு அணு ஆயுதப் பிரயோகம் தான் இருக்கப் போகிறது.

அமெரிக்க மற்றும் உலக முதலாளித்துவம் இந்த பூகோளத்தை ஒரு மூன்றாவது, அணு ஆயுத உலகப்போரினால் சூழச் செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவிலும் சர்வதேச அளவிலும் தொழிலாளர்களும் இளைஞர்களும் இந்த திகிலூட்டும் நிகழ்வுகளுக்கு முழுத் தீவிரத்துடனும் மன உறுதியுடனும் பதிலிறுப்புச் செய்ய வேண்டும்.

தொழிலாள வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு சோஷலிஸ சர்வ தேசியவாதத்தின் அடிப்படையில் ஒரு வெகுஜன போர் எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தின் பகுதியாக ஆப்கானிஸ்தான், சிரியா மற்றும் ஈராக்கில் சமீபத்தில் அமெரிக்கா நடத்தி வருகின்ற அட்டூழியங்களுக்கு எதிராக அமெரிக்காவிலும் மற்றும் உலகெங்கிலும் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டாக வேண்டும்.

**அமெரிக்கா மற்றும் வட கொரியா இடையிலான ஓர் இராணுவ மோதலின் அபாயம்**

அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையிலான ஓர் இராணுவ மோதலின் அபாயம் (17 April 2017க்கு முன்னைய வாரம்) முழுமையிலும் தொடர்ந்து தீவிரமடைந்து சென்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் பதற்றங்களைக் குறைக்க முனைவதற்கெல்லாம் வெகுதூரத்தில், ட்ரம்ப் நிர்வாகமானது, உடனடி இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கும் சாத்தியத்தை சமிக்ஞையளிக்கும் வாய் வீச்சைப் பிரயோகிப்பதைத் தொடர்ந்தது.

ஞாயிறன்று,(16.04.2017) வட கொரியா ஒரு மத்திய-தூர ஏவுகணை ஒன்றை வெடிப்புச்சோதனை செய்ததாகக் கூறப்பட்டது, ஆனால் இந்தச் சோதனை தோல்வியடைந்தது. அமெரிக்காவின் ஒழுங்கமைப்பிலான இரகசிய நாச வேலை தான் இதற்குக் காரணமாய் இருக்கக் கூடும் என அமெரிக்க ஊடகங்கள் ஊகங்களை வெளியிட்டுள்ளன. இவ்வாறான சம்பந்தத்தை ட்ரம்ப் நிர்வாகத்தின் அதிகாரிகள் மறுக்கவோ அல்லது ஏற்கவோ மறுத்திருக்கின்றனர். என்றாலும், வடகொரியாவுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கென இத்தகைய வழிமுறைகளை அமெரிக்கா பல வருடங்களாய் அபிவிருத்தி செய்து வந்திருக்கிறது.

(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### நோர்வேயின் சமாதான முயற்சி

'மனிதாபிமானப் புரிந்துணர்வு உடன்படிக்கை' என்ற தலைப்பைக் கொண்ட இந்தத் திட்ட வரைவு ஆவணங்களின் பிரதிகளை சிறிலங்கா அரசிடமும், விடுதலைப் புலிகள் இயக்கத்திடமும் நோர்வே அரசு கையளித்தது. ''அமைதியான தீர்வுக்கு இட்டுச் செல்லும் பேச்சுகளை நடத்துவதற்கான சுமுகச் சூழ்நிலையை உருவாக்கவும், மனிதாபிமான நிலைமையை மேம்பாடு செய்யவும், இன நெருக்கடியால் உருவான மக்களின் துன்பங்களைத் துடைக்கவும் வழிகோலுவதே இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கமாகும்.'' என இந்த ஆவணம் பிரகடனப்படுத்தியது. நோர்வேயின் அந்தத் திட்ட வரைவு, பின்வரும் நடவடிக்கைகளைச் சமநேரத்தில் எடுக்குமாறு இரு தரப்பையும் வேண்டிக் கொண்டது.

*அ) போருபகரணங்கள் அல்லாத பொருள்கள் வன்னிக்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்தல்: மடு ஊடான பாதை வழியாகப் பொருள்கள் தாராளமாக அனுப்பப்படுவதற்கு வழிவகை செய்வதுடன் ஏ-9 நெடுஞ்சாலையில் - வவுனியாவுக்கு வடக்கே - புதிய பாதை ஒன்றைத் திறந்து, இரு பாதைகள் வழியாகவும் பொருள்களைத் தாமதங்களின்றி அனுமதிக்க சிறிலங்கா அரசு ஏற்பாடு செய்யும். போர்ப் பாவனைக்கு அல்லாத பொருள்கள் வன்னிக்கு அனுப்பப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதுடன், அவை சாதாரண பொது மக்களைச் சென்றடைவதையும் புலிகள் இயக்கம் மேற்பார்வை செய்யும்.*

*ஆ) பொது மக்களை இலக்கு வைக்கும் தாக்குதல்களைத் தவிர்த்தல்: கொலைகள், குண்டுத் தாக்குதல்கள், நாச வேலைகள், அரசியற் குழுக்களையோ அல்லது தனி நபர்களையோ மிரட்டும் வன்முறைகள் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும், புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல்களாகக் கொள்ளப்படும்.*

நோர்வே தயாரித்த அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை, பொருள்கள் தடையின்றி எடுத்துச்செல்லப்படுகின்றமையைக் கண்காணிப்பதற்கு ஒரு சர்வதேச மனிதாபிமான கண்காணிப்புக் குழுவை உருவாக்கும் யோசனையையும் முன்வைத்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கைத் திட்ட வரைவின் யோசனைகளைத் தாங்கள் முழு மனதோடு பரிசீலித்து வருகின்றனர் எனப் புலிகள் இயக்கம் நோர்வே அரசுக்கு அறிவித்தது. 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தனது வருடாந்த மாவீரர் நாள் உரையில் இது பற்றிக் குறிப்பிட்ட தலைவர் பிரபாகரன், *''போர் நெருக்கடி தளர்ந்து இயல்பு நிலை தோன்றுவதற்கு இரு தரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண* நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நோர்வே அரசு யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலித்து வருகின்றோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச் சுமை குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதானச் சூழல் தோன்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமானால் நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.'' என்று தெளிவாகக் குறிப்பிட்டார்,





ஆனால், நோர்வேயின் முயற்சிகளுக்குப் பதிலளிப்பதை சந்திரிகா அரசு தாமதப்படுத்தியது. அதேவேளை, நோர்வே அரசுக்கும் சர்வதேசச் சமூகத்துக்கும் பேச்சு மூலம் சமாதானத் தீர்வு காண்பதில் தமக்கு இருக்கும் நேர்மையான ஈடுபாட்டையும் மனப்பூர்வமான விருப்பத்தையும் காட்டுவதற்காக, விடுதலைப்புலிகள் இயக்கம், ஓர் ஆச்சரியம் ஊட்டும் நகர்வாக ஒரு தலைப்பட்சமான ஒரு மாத காலப் போர் நிறுத்தம் ஒன்றை 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து அறிவித்தது. சமாதான முயற்சிகளுக்குத் துணையாக புலிகள் இயக்கம் எடுத்த ஒரு நல்லெண்ண நடவடிக்கை அது. இது பற்றிப் புலிகளின் செய்திக் குறிப்பு இவ்வாறு தெரிவிக்கின்றது.

*''2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் நாளில் இருந்து 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் நாள் வரை சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு எதிரான அனைத்துப் பகை நடவடிக்கை களையும் நிறுத்தி வைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் பிரதம இராணுவத் தளபதியுமான வே.பிரபாகரன், தமிழீழத் தேசிய இராணுவத்தின் சகல படையணிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

*''நத்தார், புதுவருடம், தைப் பொங்கல் ஆகிய திருநாள்கள் நிகழப்போகும் பண்டிகைக் காலத்தில் அமைதி பேணுமாறு சிறிலங்கா அரசு தனது ஆயுதப் படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் ஒரு தலைப்பட்சமாக இந்தப் போர் நிறுத்தத்தை அறிவிக்கிறோம். சமாதானத்திலும், பேச்சுகள் மூலமான அரசியல் தீர்விலும் எமக்கு உள்ள நேர்மையான, ஆழமான அபிலாஷையைக் குறிக்கும் நல்லெண்ண வெளிப்பாடாகவே எமது போர் நிறுத்த முடிவைக் கருதவேண்டும். யுத்த நெருக்கடியைத் தணித்து, இயல்பான நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்க இடமளிக்கும் நோக்குடனேயே நாம் அமைதி பேணத் தீர்மானித்தோம்.*

*''எமது படையணிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தி, பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக நோர்வேயின் புரிந்துணர்வுத் திட்ட யோசனைகளைநடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசு முன்வருமானால், நிலையான போர் நிறுத்தத்துக்கும் நேரடிப் பேச்சுகளுக்கும் வழிகோலும் நல்லெண்ண புற நிலையை உருவாக்கும் பொருட்டு அமைதி பேணும் காலத்தை மேலும் நீடிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.''*

விடுதலைப்புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை சிறிலங்கா அரசு நிராகரித்தது. 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் நாள், ஜனாதிபதியின் செயலகம் வெளியிட்ட அறிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரச படைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. போர் ஓய்வுக்கான புலிகளின் பிரகடனத்தை நிராகரித்ததுடன், சமரசப் பேச்சுகளுக்கு முன்னதாக நல்லெண்ண சமிக்ஞைகள் அவசியம் இல்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுகளுக்கு முன்னதாகப் போருக்கு ஓய்வுகொடுத்து அமைதிபேணுவது அவசியம் இல்லை என்பதே சந்திரிகா அரசின் கண்டிப்பான நிலைப்பாடாக இருந்தது. பேச்சுகள் ஆரம்பமாகி, ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தை எட்டிய நிலையிலேயே பகை நிறுத்தம் பற்றிப் பரிசீலனை செய்யலாம் என அரசின் அறிக்கை தெளிவுபடுத்தியது. இன்னொருவகையில் சொல்வதாயின், சந்திரிகாவின் அரசு இராணுவ அணுகுமுறையைக் கைவிடத் தயாராக இல்லை. ஒரு புறம் சமரசப் பேச்சுகளை நடத்திக் கொண்டு, மறுபுறம் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைத் தொடர்வதையே சந்திரிகா விரும்பினார். ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தனர். சண்டையையும் செய்து கொண்டு, சமரசத்திலும் ஈடுபட விடுதலைப்புலிகள் தயாராக இல்லை. இரு தரப்பினருக்கும் மத்தியில் நிலவிய இந்த முரண்பாடு நோர்வேயின் சமாதான முன் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டது.

(தொடரும்...)

# நோர்வேயில் நடைபெற்ற மே நாள்...

ஆண்டு தோறும் மே மாதம் முதலாம் திகதி உலக மெங்கும் உழைக்கும் வர்க்கத்தின், தொழிலாளர்களின் நாளாக இன, மத, மொழி, நாடு என்ற வேறுபாடுகளின்றி உழைக்கும்வர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்தியை, ஒற்றுமையைப் பறைசாற்றும் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

அந்தவகையில், நோர்வேயில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட மே எழுச்சி நாள் பேரணியில் நோர்வேயில் வாழும் பல்லின மக்களும் கலந்து கொண்டனர்.


தாயகத்தில் அடக்கு முறைக்குள் அகப்பட்டு தவிக்கும் உறவுகளின் விடுதலைக்காகவும் இலங்கை அரசால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நியாயம் வேண்டியும் பேரணி நடத்தப் பட்டது. (ஐ)






# ஜேர்மனியிலும் தமிழின அழிப்புக்கு நீதிகோரி கவனவீர்ப்பு






மே நாள் அல்லது மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டு தோறும் மே முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும். சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஜேர்மனியில் பல நகரங்களில் தொழிற்சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பேரணிகளில் தமிழ் மக்களும் கலந்து கொண்டு தமிழின அழிப்புக்கு நீதி கோரும் வகையில் கவனவீர்ப்பை ஏற்படுத்தினர்.

தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் பதாகைகளை தாங்கிய வண்ணம், ஜேர்மன் மொழியில் துண்டுப் பிரசுரங்களை வழங்கி பல்லின சமூகத்திடம் விழிப்புணர்வை மேற்கொண்டனர். (ஐ)

# பிரபாகரனின் படத்தைத் தாங்கி சுவிஸில் மேதினப் பேரணி...



சர்வதேச தொழிலாளர் தினம் நேற்று முன்தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில், பல்லின மக்களின் பங்கேற்புடன் சுவிஸிலும் மே தினப் பேரணி நடைபெற்றது.

இதில் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் பலரும் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியை ஏந்தியிருந்தனர்.

அத்துடன், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படத்தையும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது விடுதலைப் போராட்டம் தொடர்பான புரட்சிப் பாடல்கள் ஒலிக்கப்பட்டன. தனித் தமிழீழம் வேண்டும் என்ற கோஷங்களும் எழுப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# பிரான்ஸில் எழுச்சியுடன் மே நாள்...


பிரான்ஸில் பாரிஸில் இருந்து ஆரம்பித்த மே நாள் பேரணி பாரிஸின் பிரதான வீதிகளின் ஊடாக நகர்ந்து Nation சுற்று வட்டப் பகுதியைச் சென்றடைந்தது.

பிரான்ஸ் தொழிற்சங்கங்கத்தினரும் வெளிநாட்டவர்களும் தமிழ் மக்களும் ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டிருந்தனர். பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டிருந்தனர்.

பல்வேறுபட்ட இனங்களது கட்சிகளதும் அமைப்புகளதும் ஒன்றிணைந்த அணிவகுப்புக்கு மத்தியில் தமிழ் மக்களின் பேரணியும் இடம்பெற்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்





உருவப்படம் தாங்கிய ஊர்தியின் மத்தியில் பதாகைகளைத் தாங்கிய நிலையில் கோஷம் எழுப்பியவாறு மக்களும் அணிவகுத்துச் சென்றனர். (ஐ)

## தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு குழப்பம் ஏற்படுத்த மஹிந்த முயற்சி

தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு குழப்பத்தை ஏற்படுத்த ராஜபக்ஷ குழுவினர் முயற்சிக்கின்றனர் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பொரளை, கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1977ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி புரட்சியை விட பெரிய புரட்சியை 2020ஆம் ஆண்டு நாங்கள் ஏற்படுத்துவோம்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லை என்றால் இந்த நாடு சிங்கப்பூர் மலேஷியாவை விட முன்னேறிச்சென்றிருக்கும். அந்த அமைப்பை மீண்டும் ஏற்படுத்திமெது பொருளாதார பலத்தை தடுத்து நிறுத்த முயற்சித்த ராஜபக்ஷ குழுவினர், அது முடியாததால் தொழிற்சங்கங்களைதூண்டிவிட்டுகுழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.- என்றார்.(எ)

# தமிழருக்கு எதிராக சிங்களவரைத் தூண்டி ஆட்சியைப் பிடிக்க முயல்கிறார் மஹிந்த!

## கொழும்பு மே தினக் கூட்டத்தில் ஜே.வி.பி. தலைவர்



கொழும்பு, மே 03

புலிகள் மீண்டும் எழுச்சி பெறப்போகின்றார்கள் என்று தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டி விட்டு இழந்த ஆட்சியைப் பிடிக்க மஹிந்த ராஜபக்ஷ முயல்கின்றார் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த செம்மேதினக் கூட்டம் கொழும்பு பீ.ஆர்.சி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 69 வருடங்களாக மாறி, மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியாகவும், சுற்றாடல் ரீதியாகவும் நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர். அத்துடன் சர்வதேசத்திடம் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாட்டை கொண்டுபோய் விட்டுள்ளனர்.

நாட்டு மக்களை கௌரவமானவர்களாக வாழ வைப்பதற்குப் பதிலாக இழிவானவர்களாக வாழ்வதற்கான வழிகளையே அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களைத்தூண்டி விட்டு தேசப்பற்றை வெளிக்காட்ட முயற்சிக்கும் அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குச் சொந்தமான அரிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதில் தீவிரம் காட்டி யுள்ளார்.

மறுபக்கத்தில் மைத்திரிபால சிறிசேன பயத்தின் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாது பின்னடித்து வருகின்றார். தேர்தலை நடத்துவாராயின் அவருடைய ஜனாதிபதி பதவி இல்லாமல் போகும் என்பது அவருக்கு உறுதியாகத் தெரிந்துள்ளது.

கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. ஜனாதிபதிக்கு இரண்டு கார்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் 5 ஆயிரத்து 740 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளனர். அதே நேரம், பிரதமருக்கு இரண்டு கார்களை கொள் வனவு செய்ய 5 ஆயிரத்து 930 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார்கள்.

மறுபக்கத்தில் மீதொட்டமுல்லவில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வெறும் ஒரு லட்சம் ரூபாவே நஷ்டஈடு வழங்கப்படுகிறது. அவர்களின் ஒரு காருக்கு செலவாகும் பணத்தை சமப்படுத்த மீதொட்டமுல்லவில் 3 ஆயிரம் பேர் உயிரிழக்க வேண்டும். ஜனாதிபதி தனது வீட்டிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நாடாளுமன்றத்துக்கு ஹெலியில் செல்கின்றார். தற்பொழுது இருக்கும் ஆட்சி ஆட்சியாளர் களுக்கான ஆட்சியாகும். அவர்கள் பொதுமக்கள் பற்றிக் கவலைப்படுவதில்லை.

மஹிந்த ராஜபக்ஷ புலிகள் மீண்டும் புத்துயிர் பெறப்போகின்றார்கள் என்று கூறி தனது இழந்த அதிகாரத்தைப் பெறமுடியும் என்று முயற்சிக்கின்றார். இதற்கு வடக்கிலும் சிலர் ஆதரவளிக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

எனினும், யுத்தத்தில் ஏற்பட்ட பிரதிபலன் காரணமாக வடக்கில் மீண்டுமொரு ஆயுதப்புரட்சி ஏற்படாது. அவ்வாறு ஒரு புரட்சி ஏற்படுவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் இடமளிக் காது.- என்றார். (எ)

# மஹிந்த ஆட்சிக்கு வருவதற்கு ஒருபோதும் இடமளியோம்!

## அமைச்சர் சம்பிக்க காட்டம்



கொழும்பு, மே 03

இரண்டு வெசாக் பௌர்ணமிகளுக்குள், இந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். 2 வெசாக் பௌர்ணமிகள் அல்ல, 20 வெசாக் பௌர்ணமிகள் வந்தாலும், ராஜபக்ஷாக்களை ஆட்சிக்குவர, நாம் ஒருபோதும் இடமளியோம் என்று மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ராஜபக்ஷாக்களின் பௌர்ணமி கதைகள் தற்போது மாற்றமடைந்துள்ளன. இரு பௌர்ணமி தினங்களுக்குள் ஆட்சியைக் கவிழ்ப்போம் என்றவர்கள், இப்போது, இரு வெசாக் பௌர்ணமி கதைகள் பற்றிப் பேசுகிறார்கள். இனி உங்களால் ஆட்சிக்கு வரவே முடியாது என்பதை உறுதிபடக் கூறுகிறோம். மே தினப் பேரணி, நடைபாதை வியாபாரிகள், துப்புரவுத் தொழிலாளர்கள், சுமை தூக்குபவர்கள் உட்பட பாட்டலி வர்க்கத்தின் பிரச்சினைகளைப் பற்றிக் கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பும் அதன் புறநகர்ப் பகுதிகளும், அழகுபடுத்தப்பட்டுள்ள போதிலும், புறக்கோட்டையிலும் கோட்டையிலும் வாழும் தொழிலாளர்களின் வாழ்க்கை, பிரித்தானியாக் காலத்தின் பின்னர் மாற்றமடையவில்லை.- என்றார். (எ)

# ஜனநாயக விரோத ஆட்சிக்கு ஒருபோதும் இடமளியோம்!

## நுகேகொட மே தினக் கூட்டத்தில் விக்கிரமபாகு



கொழும்பு, மே 03

நாட்டில் மீண்டும் பாசிசவாத மற்றும் இனவாத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சி திட்ட மிட்டு வருகின்றது. அதற்கு ஆதரவானவர்களே காலிமுகத்திடலில் ஒன்று கூடுகின்றனர். அதனால் நாட்டில் மீண்டும் ஜனநாயக விரோத ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் இணைந்து நுகேகொட ஆனந்த சமரக்கோன் திறந்த வெளியரங்கில் நேற்று முன்தினம் நடத்திய மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று நாட்டில் இருப்பது இரண்டு கூட்டங்கள். அவை ஜனநாயக கூட்டமும் ஜனநாயக விரோத கூட்டமும். ஜனநாயக விரோத கூட்டம் தான் இன்று காலிமுகத் திடலில் இடம்பெற்ற மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியின் மேதின கூட்டம். மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கடந்த அரசு மேற்கொண்ட பாசிச வாத ஆட்சியை மீண்டும் ஏற் படுத்துவதற்கே அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

அத்துடன், அரசு ஊழல் மோசடிகாரர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை மந்த கதியில் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, எக்னலிகொட போன்றவர்களின் கொலை மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே போன்று அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு இன்னும் தீர்வை வழங்காமல் இருக்கின்றது.

தற்போதைய அரசை அமைப்பதற்கு இடதுசாரி கட்சிகள் முன்னின்று செயற்பட்டன. அதனால் அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். குறிப்பாக சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமை மற்றும் புதிய அரசமைப்பு என்பனவற்றை உருவாக்குவது தொடர்பாக அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

# மலையக மக்களின் இடங்கள் பறிபோகும் நிலை!

## எச்சரிக்கிறார் இ.தொ.கா. தலைவர் முத்துசிவலிங்கம்

மலையக மக்களின் இருப்புரிமை இடங்களை கையகப்படுத்தி எதிர்காலத்தில் அவர்களை கைவிடும் நிலை உருவாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முத்து சிவலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வுகள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நேற்று முன்தினம் ஹற்றன் - கினிகத்தேனை பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்காலத்தில் நமது இருப்புரிமை இடங்களை பிடுங்கிக் கொண்டு எம் மக்களை நட்டாற்றில் விடும் சந்தர்ப்பம் உருவாகி வருகின்றது.

இதற்கு ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டோம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்கள் மனதை வென்றது என்பதை மீண் டும் ஒருமுறை இந்த மேதினக் கூட்டத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இங்கு உரையாற்றிய அமைச்சர்களின் உரையில் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானால் எதிர்காலத்தில் மலையக மக்களின் வாழ்க்கை சிறப்படையும் என்பதும் உண்மை.

ஒற்றுமை என்பது எமது மக்களுக்கு அவசியமான ஒன்றாக அமைகின்றது. இந்த ஒற்றுமை பலப்படும் பட்சத்தில் நாம் சுபீட்சமாக வாழும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். -என்றார்.

# ஈழத்தமிழர் படுகொலையின்போது மௌனமாக இருந்தவர் ஸ்டாலின்

## சாடுகிறார் பன்னீர்செல்வம்

சென்னை,மே 03

கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலத்தில், ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படும்போது, எந்தவித அழுத்தம் கொடுக்காமல் இருந்தவர் தி.மு.க செயல் தலைவர் மு.க.ஸ்டாலின். இப்போது அவர் அதனை மறந்துவிட்டாரா? அல்லது மறந்தது போல் நடிக்கிறாரா?

-இவ்வாறு அ.தி.மு.க. (புரட்சி தலைவி அம்மா) அணியைச் சேர்ந்த ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

அ.தி.மு.க. (புரட்சிதலைவி அம்மா) அண்ணா தொழிற்சங்க பேரவை சார்பில், மே தினப் பொதுக்கூட்டம் சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2006-2011 ஆண்டு வரையான காலப்பகுதியில் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது தமிழக மக்கள் பட்ட வேதனை, துன்பத்தை இன்னும் மறக்கமாட்டார்கள். மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோது, காவிரி நடுவர்மன்ற தீர்ப்பு குறித்து எதனையும் அவர் செய்யவில்லை. உச்சநீதிமன்றம் வரை சென்று காவிரி நடுவர் மன்ற விவகாரத்தில் அரசாணை பெற்றுத்தந்தவர் ஜெயலலிதா. இதேபோல, உச்சநீதிமன்றம் சென்று முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த அரசாணை பெற்றுத் தந்தவரும் அவரே.

அ.தி.மு.க. இரு அணியாக பிரிந்து நின்றதால், எளிதில் வெற்றி பெற்றுவிடலாம் என்று மு.க.ஸ்டாலின் மனப்பால் குடித்து என்ன செய்வது என்று தெரியாமல், என்மீது வசைபாடி தாக்குதல்களை தொடுத்தார். அது பலிக்கவில்லை. மு.க. ஸ்டாலின் முதலமைச்சராக வந்துவிட வேண்டும் என்று பல திட்டங்களை போட்டு வலம்வந்தார். ஆனால், எதுவும் பலிக்கவில்லை.

தமிழகத்தை 27 ஆண்டுகள் ஆட்சி செய்த பெருமை அ.தி. முகவுக்கு உண்டு. அந்த பெருமையைப் பெற்றுத்தந்தவர்கள் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தான். ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பின்னர் எமது இயக்கம் அ.தி.மு.க. (புரட்சி தலைவி அம்மா) ஜெயலலிதாவின் மக்களாட்சி தத்துவத்தின் படி, வழிக்காட்டுதலின்படி நடக்கிறது. ஒரு குடும்பத்தின் பிடியில் கட்சியும், ஆட்சியும் சென்றுவிடக்கூடாது என்று நாம் நினைத்தோம். ஆனால் அப்படிச்சென்றுவிட்டது. அந்த குடும்பத்தின் கையில் இருந்து கட்சியையும், ஆட்சியையும் மீட்டெடுக்க வேண்டும் .

ஆர்.கே.நகர் தொகுதியில் எமது அணி வேட்பாளர் மதுசூதனனுக்கு மக்கள் முழு ஆதரவை தந்தனர். அதில் மிரண்டுபோய் டி.டி.வி. தினகரன் அணியினரும், தி.மு.க. வினரும் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வெற்றி பெற்றுவிடலாம் என்று தப்புக்கணக்குப் போட்டார்கள். தேர்தலையும் நிறுத்திவிட்டார்கள். ஆர்.கே.நகர் தேர்தல் எப்போது நடந்தாலும் எங்களுடைய வேட்பாளர் மதுசூதனன் தான். கண்டிப்பாக வெற்றி பெறுவார்.-என்றார். (ச)

# ராஜீவ் படுகொலை வழக்கின் விசாரணை எப்போது முடியும்?

### உச்ச நீதிமன்று சி.பி.ஐயிடம் கேள்வி

சென்னை, மே 03

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு விசாரணை எப்பொழுது முடியும் என அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி. ஐயிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் இந்த வழக்குத் தொடர்பாக நான்கு வாரங்களில் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் சி.பி. ஐக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், இந்த வழக்கில் சி.பி.ஐ. தலைமையிலான விசாரணைக் குழுவின் விசாரணை எப்பொழுது முடியும் என கேள்வி எழுப்பி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்பொழுது, ராஜீவ் கொலை வழக்கில் சி.பி.ஐ. விசாரணை எப்பொழுது முடியும்? சி.பி.ஐ. தலைமையில் உருவாக்கப்பட்ட பன்நோக்கு விசாரணை குழுவின் தற்போதைய நிலை என்ன? என நீதிமன்றம் சி.பி.ஐ. இடம் கேள்வி எழுப்பியது.

அப்பொழுது சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இந்த வழக்கில் வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும் தொடர்பு இருப்பதால் அவர்களை விசாரிக்கத் தாமதமாகிறது என்று தெரிவித்தார்.

அத்துடன் நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க நான்கு வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# இந்தியாவில் முதல் முறையாக 'ஸ்கைப்' மூலம் விவாகரத்து!

இந்தியாவில் முதல் முறையாக 'ஸ்கைப்' மூலமாக, ஓர் இளம் ஜோடிக்கு குடும்ப நல நீதிமன்றம் விவாகரத்து வழங்கியுள்ளது. கணவன் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜரான நிலையில், மனைவி லண்டனில் இருந்து 'ஸ்கைப்' மூலம் ஆஜராகி விவாகரத்துப் பெற்றார்.

மகாராஷ்டிர மாநிலம் புனேவைச் சேர்ந்த இந்தத் தம்பதி, கடந்த 2015 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதி காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். இருவரும் புனேயில் வெவ்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து வந்தனர். இந் நிலையில், இருவருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஒரே நேரத்தில் கதவைத் தட்டியது. இதுவே அவர்களது திருமண வாழ்வுக்கும் வினையாகிப் போனது.

கணவனுக்கு சிங்கப்பூரில் வேலை கிடைத்து அங்கு சென்று விட்டார். ஆனால், மனைவிக்கு லண்டன் செல்ல வாய்ப்புக் கிடைத்தும், அங்கே செல்ல முடியவில்லை. ஆனால், மனைவிக்கு வெளிநாட்டு வேலையை இழக்க விருப்பமில்லை. இந்த விவகாரத்தில் தம்பதிக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி முதல் இருவரும் பிரிந்து வாழ முடிவு செய்தனர். அதன்பின்னர் மனைவி லண்டன் சென்றுவிட்டார்.

இந்நிலையில், வழக்கின் இறுதி விசாரணை புனே நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது, சிங்கப்பூரில் இருந்து வந்து கணவன் நேரில் ஆஜரானார். மனைவியால் லண்டனில் இருந்து வரமுடியவில்லை. வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகக் கூடாது என அவர் பணிபுரியும் நிறுவனம் ஏற்கெனவே நிபந்தனை விதித்திருந்தது.

இதையடுத்து, அவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சுசித் முன்தாதா, 'ஸ்கைப்' மூலம் லண்டனில் இருந்தபடி மனைவியை ஆஜராக அனுமதிக்கக் கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விசாரணை மூலம் தம்பதியில் கணவன், மனைவிக்கு விவாகரத்து வழங்கினார்.

இந்தியாவிலேயே 'ஸ்கைப்' மூலமாக தம்பதிக்கு விவாகரத்து வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை இதுவே முதன்முறையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



புதுக்கோட்டை நெடுவாசலில் ஹைட்ரோகார்பன் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களையும், போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்களையும் படத்தில் காணலாம். (ச)

# தினகரனுக்கு 15வரை மறியல்!

இரட்டை இலைச் சின்னத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேர்தல் ஆணையகத்துக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் இருந்த டி.டி.வி. தினகரனை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் தினகரனுக்கு 5 நாள்கள் விதிக்கப்பட்ட பொலிஸ் காவல் நிறைவடைந்துள்ள நிலையில், அவர் டில்லி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றம் விடுத்தது. (ச)

# காஷ்மீரில் வங்கி வான் மீது தீவிரவாதிகள் வேட்டு; 7 பேர் சாவு!

காஷ்மீர்,மே 03

காஷ்மீரில் அமைந்துள்ள வங்கி ஒன்றுக்குச் சொந்தமான வான் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வாகனத்தில் பயணித்த 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து, அந்த வாகனத்தில் இருந்த பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு காஷ்மீரில் உள்ள குல்காம் மாவட்டத்தின் வங்கி ஒன்றுக்கு பணம் நிரப்புவதற்குச் சென்ற மேற்படி வான் மீதே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் ஐந்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இரண்டு வங்கி அதிகாரிகள் உட்பட 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதன் போது பொலிஸாரிடம் இருந்த ஆயுதங்களையும், வானில் இருந்த பணத்தையும் தீவிரவாதிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளை அடிக்கப்பட்ட வானில் சுமார் 50 லட்சம் ரூபா பணம் இருந்தது எனக் கூறப்படுகின்றது.

50 லட்சம் ரூபா பணம் கொள்ளை



இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

### விரைவில் அணுகுண்டு தாக்குதல் நடத்துவோம் வடகொரியா மிரட்டல்

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை மீறிய வகையில் விரைவில் அணுகுண்டு தாக்குதலை நடத்தப் போவதாக வட கொரியா மீண்டும் மிரட்டியுள்ளது.

வட கொரொயா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அமெரிக்காவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அணு ஆயுதத் தாக்குதல் உள்ளிட்ட அனைத்து வகை தாக்குதலுக்கும் தங்கள் நாடு தங்களது நாடு தயார் நிலையில் உள்ளது.

எங்கள் நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டால் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் இருந்தும் தாக்குதலை ஆம்பிக்க நாம் தயாராக இருக்கிறோம்.- என்றுள்ளது.

# சரியான தருணம் வந்தால் ஜனாதிபதி ட்ரம்ப் வடகொரிய ஜனாதிபதியைச் சந்திப்பாராம்

## ஆனால் வெள்ளை மாளிகை நிபந்தனை





வொஷிங்டன், மே 03

கொரிய தீபகற்பத்தில் எந்நேரத்திலும் போர் மூளும் அபாயம் இருப்பதாக ஆய்வாளர்கள் கணித்துள்ள நிலையில் உகந்த சூழ்நிலை ஏற்படும்போது வட கொரிய ஜனாதிபதியைச் சந்திக்க தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் ஒரு புத்திசாலி என நேற்று முன்தினம் ட்ரம்ப் பாராட்டுத் தெரிவித்திருந்த நிலையிலேயே, அவர் இந்தக் கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அணு ஆயுதச் சோதனை தொடர்பில் பேச்சு நடத்துவற்கு, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் அமெரிக்கா வந்தால் உகந்த சூழலில் அவரைச் சந்திக்கத் தயார்.

அணுகுண்டுச் சோதனைகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கா பகிரங்க மிரட்டல்விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**வெள்ளைமாளிகை நிபந்தனை**

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர் வட கொரியா சில நிபந்தனைகளுக்கு உடன்படவேண்டும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விளக்கம் அளித்திருந்தவெள்ளைமாளிகை,

ட்ரம்ப் மற்றும் வட கொரிய ஜனாதிபதிக்கு இடையில் சந்திப்பு நடைபெறுவதற்கு முதல் வட கொரியாவின் கோப மூட்டும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

எனினும், நிபந்தனைகள் விடயத்தில் இது வரை எவ்வித கருத்துக்களையும் வெள்ளைமாளிகை அறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஷோன் ஸ்பைஸர்,

'நிபந்தனைகள் விடயத்தில் தற்போது கருத்து தெரிவிக்க முடியாது. ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்ததை போன்று, சரியான தருணம் வரும் பட்சத்திலேயே வட கொரியாவுடன் சந்திப்பு நடத்தப்படும்.

இந்தச் சந்திப்பு நடத்தப்பட சிறிது காலம் செல்லும். ஏனெனில் தற்போது நிலவும் சூழ்நிலையில் வடகொரியாவுடனான சந்திப்பு இடம்பெறுவது சாத்தியமற்றது.- என்றார். (எ)

# திடீர் காற்றுக்கொந்தளிப்பால் விமான விபத்து: 27 பேர் காயம்

## மொஸ்கோவிலிருந்து பாங்கொக் சென்ற வேளை

ரஷ்யத் தலைநகர் மொஸ் கோவிலிருந்து தாய்லாந்து தலைநகர் பாங் கொக் நோக்கிப் பயணித்த விமானத்தில் ஏற்பட்ட திடீர் காற்றுக் கொந்தளிப்பால் பயணிகள் 27 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் சிலருக்கு எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில்காயமடைந்தவருக்கும் உயிராபத்து இல்லை என்று ரஷ்ய அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

காற்று கொந்தளிப் பால் விமானம் ஆடத் தொடங்கியதாகப் பயணி ஒருவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

பாங்கொக்கில் தரையிறக்குவதற்கு 40 நிமிடங்களுக்கு முன்னதாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்களில் 24 பேர் ரஷ்யப் பிரஜைகள் என்றும் மூன்று பேர் தாய்லாந்து பிரஜைகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தெளிவானகாலநிலையில் வானத்தில் விமானம் பறந்து கொண்டிருந்த போதுதிடீரென இந்தக் காற்றுக் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் விமானப் பணியாளர்களால் பயணிகளுக்கு எவ்வித எச்சரிக்கையையும் விடுக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிச் செல்லுமா பிரான்ஸ்?

## சீர்திருத்தங்களை நிறைவேற்றக்கோருகிறார் ஜனாதிபதி வேட்பாளர் மக்ரோன்



ஐரோப்பிய ஒன்றியம் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை வகிக்கும் வேட்பாளர் இமானுவல் மக்ரோன் வலியுறுத்தியுள்ளார். இல்லாவிட்டால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரான்ஸ் விலகிச் செல்லும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐரோப்பிய திட்டங்களுக்கு சீர்திருத்தம் அவசியமாக உள்ளது.

நான் ஓர் ஐரோப்பிய சார் புடையவன். பிரான்ஸ் ஜனா திப தித் தேர்தலில் ஐரோப்பியக் கருத்து மற்றும் கொள்கைகளை நான் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றேன்.

ஏனெனில் பிரெஞ்சு மக்களுக்கும் உலகமயமாக்கலில் எமது நாட்டுக்கும், அது மிகவும் முக்கியமானது என்று நான் நம்புகிறேன்.

ஆனால், அதே நேரத்தில் நாம் நிலைமையை எதிர்கொள்ள வேண்டும், நம் மக்கள் கூறுவதைக் கேட்க வேண்டும். இன்று அவர்கள் கோபமடைந்திருப்பதை காண முடிகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலிழப்பு இனியும் நிலைத்திருக்காது. ஐரோப்பிய ஒன்றியத் திட்டத்தின் சீர்திருத்தமே எனது ஆணையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.-என்றார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் அண்மையில் வெளியேறி இருந்தது. இதற்கு அந்தநாட்டு மக்கள் ஆணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரிய ஏவுகணைகளைத் தடுக்கும் 'தாட் பாதுகாப்பு' செயற்படும் நிலையில்!



அமெரிக்காவினால்தென் கொரியாவில் அமைக்கப்பட்டு வந்த சர்ச்சைக்குரிய 'தாட்' ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு தற்போது செயற்படும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு, வட கொரியா விடுத்து வரும் ஏவுகணை அச்சுறுத்தல்களைத் தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வட கொரியா சர்வதேச நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

வடகொரியா சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நாவின் தடைகள் மற்றும் எச்சரிக்கைகளை மீறி தொடர்ந்து அணுவாயுத பரிசோதனைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை, வடகொரியா தனது 6 ஆவது ஏவுகணை பரிசோதனையை முன்னெடுத்திருந்த போதிலும் அது தோல்வியில் முடிவடைந்திருந்தது.

இதனால், கொரிய தீபகற்பத்தில் எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்ற அச்சம் நிலவி வருவதுடன் பதற்றநிலை அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே வட கொரியாவின் ஏவுகணை தாக்குதல்களை சமாளிக்கும் வகையில் அமெரிக்கா தென் கொரியாவில் 'தாட்' ஏவுகணை எதிர்ப்பு அமைப்பை நிறுவிவந்தது.

இதனடிப்படையில் நிறுவப்பட்டு வந்த தாட் அமைப்பின் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், தற்போது செயற்படும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரிய ஏவு கணைகளைத் தடுக்கவும் தெற் கில் பாதுகாக்கவும் இப்போது குறித்த அமைப்பு முறைப் படுத்தப்பட்டுள்ளது.

எனினும், அந்த அமைப்பின் முழுமையான செயற்பாட்டு திறன் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் மேம்படுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அந்த ஏவுகணைபாதுகாப்பு அமைப்புக்கு தென்கொரிய மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# உலகின் வயது முதிர்ந்த இந்தோனேஷிய வாசி சாவு!



உலகின் வயது முதிர்ந்த மனிதராக கருதப்படும் இந்தோனேஷியாவில் வாழ்ந்து வந்த 146 வயதான சோடி மெட்ஜோ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

1890 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்சோடிமெட்ஜோ பிறந்துள்ளார் என்று அவரது ஆவணங்களின் ஊடாகத் தெரியவந்துள்ளது. 1900 ஆம் ஆண்டு முதல் இந்தோனேஷியாவில் பிறப்பு ஆவணங்கள் பதியப்படும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு முன்னர் பல்வேறு பிழைகள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நோய் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதன் பின்னர் அவரது உடல் நிலை மீளவும் மோசமடைந்தது என்று அவரது பேரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். நான்கு மனைவிகளைக் கொண்ட சோடிமெட்ஜோ கடுமையாகப் புகைப்பிடிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)





# பாடும்மீனை வீழ்த்தி காலிறுதியில் நுழைந்தது புளூ ஸ்ரார் அணி!

யாழ்ப்பாணம், மே 03

இவ்வருட FA கிண்ண போட்டியில் அபாரங் காட்டிய யாழ்ப்பாணம் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் எதிர்பார்ப்புக்களை உடைத்து களுத்துறை புளூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று FA கிண்ண சுற்றுப்போட்டியின் காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

அடுத்த சுற்றுத்தொடரில் பலமாகக் களமிறங்கி வெற்றியை தமதாக்கும் நோக்குடன் இப்பருவகால FA கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறுகின்றது பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.

யாழ்ப்பாணம் துரையாப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில் கடந்த சுற்றில் பொலிஸ் அணியை அவர்களின் சொந்த மைதானத்தில் பெனால்டி உதை மூலம் 4:1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியிருந்த பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், கடந்த போட்டியில் லியோ அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய பலம் வாய்ந்த சம்பியன்ஸ் லீக் அணியான புளூ ஸ்ரார் அணியும் களங்கண்டிருந்தன.

போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களில் புளூ ஸ்ரார் அணியின் நட்சத்திர வீரர் சன்ன உதைத்த பந்து கோல் கம்பத்தின் மூலையில்பட்டு வெளியே தெறித்தது.

மீண்டும் சில நிமிடங்களின் பின்னர் சன்ன உட்செலுத்திய பந்தை திலான் ஜெயந்த சீமோன் தலையால் முட்டி கோல் கம்பத்தினுள் செலுத்த அதனை இலகுவாக தடுத்தார் ராஜ்குமார்.

பந்தை புளூ ஸ்ரார் அணி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. எனினும், பந்தை மத்திய களத்தினுள் நகர்த்திக் கொண்டிருந்தனர். முன் களத்தில் சன்ன மட்டுமிருந்தார், அவரை நோக்கியும் ஓரிரு பந்துகளே நகர்த்தப்பட்டன.

அணித் தலைவர் உட்செலுத்திய பந்தை புளூ ஸ்ராரின் சிவங்க வெளியே அனுப்பினார். கீதன் அடுத்தடுத்து இரண்டு பந்துகளை உள்ளனுப்ப அவற்றை லாவகமாகத் தடுத்த சிவங்க, பஹிரை மத்திய களத்துக்குக் கடத்தினர்.

தொடர்ந்தும் முயற்சித்த பாடும்மீனுக்கு தினேஷ் குமார் தனியொருவராக எடுத்து வந்த பந்தை சேயன் கோலாக மாற்றத் தவறினார்.

பந்தை தமது கட்டுப்பாட்டுள் கொண்டுவந்த புளூ ஸ்ராருக்கு சில்வா கோலை நோக்கி செலுத்திய பந்தை ராஜ்குமார் நேர்த்தியாகத் தடுத்தார்.

கீதன் மற்றும் தினேஷ் குமாரின் அடுத்தடுத்த முயற்சிகளைத் தடுத்து பந்தை திசைமாற்றினார் சிவங்க.

37ஆவது நிமிடத்தில் சன்ன உட்செலுத்திய பந்தை கோலாக்கினார் மஸீர். அதேவேகத்தில் மஸீர் மேற்கொண்ட அடுத்த முயற்சியின் போது முன்னேறிச்சென்ற கோல் காப்பாளர் ராஜ்குமார் கீழே விழுந்த போதும், மஸீர் எடுத்துச்சென்ற பந்தை சாந்தன் தடுத்தார்.

கீதன் மற்றும் விசோத் மேற்கொண்ட முயற்சிகளை சிவங்க மற்றும் பஹிர் ஜோடி முறியடித்தது.

முறையற்ற விதத்தில் ஜோன் குயின்டனை வீழ்த்திய மொஹமட் நஜீமுக்கு காட்டப்பட்ட மஞ்சள் அட்டையுடன் முதல் பாதி நிறைவிற்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆரம்பமாகி சில நிமிடங்களில் மத்திய கோட்டுக்கு அண்மையில் புளூ ஸ்ராருக்குக் கிடைத்த ப்ரீ கிக்கின் மூலம் சில்வா கோலை நோக்கி அனுப்பிய பந்து மயிரிழையில் வெளியே சென்றது.

அடுத்த முயற்சியாக பின்கள வீரரான பஹீர் பெனால்டி எல்லைக்கு அருகிலிருந்து உதைந்த பந்தும் கோலுக்குச் சற்று உயர்வாக வெளியேறியது.

புளூ ஸ்ராரின் கோல்காப்பாளர் குமார பெர்னாண்டோ எதிர்பார்த்திருக்காத தருணத்தில் ஞானபிரதாப் உள்ளனுப்பிய பந்து, அவரின் கைகளில்பட்டு வெளியேற, பாடும்மீனுக்கு கோணர் வாய்ப்புக் கிடைத்தது. அம்முயற்சியும் பாடும்மீனுக்கு சாதகமாக அமையவில்லை.

58 ஆவது நிமிடத்தில் சில்வா உள்ளனுப்பிய பந்தை ஹெடர் மூலம் உள்ளனுப்ப முயற்சித்த திலான் ஜயந்த சிமோன் அதனை தவறவிட்ட போதும், சுதாகரித்துக் கொண்டு காலால் பந்தை உள்ளனுப்பியதன் மூலம் புளூ ஸ்ராரின் முன்னிலையை இரட்டிப்பாக்கினார்.

தமது முதல் கோலைப் பெற தொடர்ந்தும் வேகம் காட்டிய பாடும்மீனின் முன்கள வீரர்களை புளூ ஸ்ராரின் பின்கள வீரர்கள் இலகுவாகக் கட்டுப்படுத்தினர்.

கீதன் வலது புறமிருந்து அணித் தலைவருக்கு வழங்கிய பந்தை அவர் தவறவிட, விவேகமாக செயற்பட்ட ஜோன் குயின்டன் கோலாக்கி, அமைதியாக இருந்த பாடும்மீனின் அரங்கு நிறைந்த யாழ் ரசிகர்களிடத்தே ஆரவாரத்தை உருவாக்கினார்.

அது வரை அமைதியாக இருந்த அரங்கில் ஆரவாரம் அதிகரிக்க, ஆட்டமும் சூடு பிடித்தது. அதேவேகத்தில் கீதன் உள்ளனுப்பிய பந்து புளூ ஸ்ராரின் பின்கள வீரர் கைகளில்பட்டு வெளியேற பாடும்மீனுக்கு மற்றுமொரு கோணர் வாய்ப்புக் கிடைத்தது.

கோணர் உதையிலிருந்து கிடைத்த பந்தை கீதனிடமிருந்து பெற்று ஞானபிரதாப் உள்ளனுப்ப சிறு இடைவெளியில் கோலுக்கு வெளியே சென்றது.

கோல் பெற்றதன் பின்னர் பாடும்மீன் அணியினர் புளூ ஸ்ராரின் கோல் பரப்பில் பந்தினை தமது கட்டுப்பாட்டில் வைத்து, அடுத்தடுத்து முயற்சிகளை மேற்கொண்டனர்.

இவர்களது இறுதிநேர முயற்சிகள் அனைத்துக்கும் தடையாகவிருந்தவர் புளூ ஸ்ரார் அணியின் பஹிர் மட்டுமே.


இறுதி 15 நிமிட ஆட்டத்தினை முழுமையாகக் கட்டுப்படுத்தியது பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.

மயூரன் உதைந்த பந்து குமார பெர்னாண்டோவின் கைகளில் சரணடைய போட்டி நிறைவுக்கு வந்தது.

போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற புளூ ஸ்ரார் அணி காலிறுதி ஆட்டத்தில் சௌன்டர்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# அகதிகளுக்கான ஐ.நா. தூதுவரானார் அகதிகள் ஒலிம்பிக் வீராங்கனை யுஸ்ரா!



ஜெனீவா, மே 03

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நல்லெண்ணத் தூதுவராக அகதிகள் ஒலிம்பிக் வீராங்கனை யுஸ்ரா மர்தினி நியமிக்கப்பட்டுள்ளார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டவர்கள் வரிசையில் மிக இளையவர் யுஸ்ரா ஆவார்.

முன்னாள் சிரியா நீச்சல் வீராங்கனையான இவர், ரியோ 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் அகதிகள் ஒலிம்பிக் அணியில் இடம்பெற்று பெண்களுக்கான நீச்சல் போட்டியில் கலந்துகொண்டார். சிரியாவிலிருந்து தனது மூத்த சகோதரியுடன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மெடிட்டரேனியன் கடலை நீந்திக் கடந்த யுஸ்ரா, ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கு தெரிவானது முதல் உலகம் முழுவதும் உள்ள அகதிகளுக்காக குரல் கொடுத்து வருகின்றார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்று யுத்தம் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக தங்களது சொந்த நாடுகளிலிருந்து அகதிகளான 6கோடி 50 லட்சம் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் 19 வயதே உடைய யுஸ்ரா தெரிவித்துள்ளார்.

# ஸ்டோக்ஸின் அதிரடி சதத்தால் குஜராத்தை வீழ்த்தியது புனே!



புனே, மே 03

ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் பென் ஸ்டோக்ஸின் அதிரடிச் சதத்தால் புனே அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தினம் இடம் பெற்ற இரண்டாவது போட்டியில் குஜராத் மற்றும் புனே அணிகள் பலப்பரீட்சை நடத்தின. புனேவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணியின் தலைவர் ஸ்மித் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தார்.

குஜராத் அணியின் இஷான் கிஷான், மெக்கலம் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். இருவரும் சிறப்பாக விளையாடி நல்ல அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

6 ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. 24 பந்துகளில் 31 ஓட்டங்களை எடுத்த கிஷான் ஆட்டமிழந்தார். பின்னர் துடுப்பெடுத்தாட வந்த அணித் தலைவர் ரெய்னா 8 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். அதிரடி வீரர் பின்ச் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினார். பின் வரிசை வீரர்களில் தினேஷ் கார்த்திக் மற்றும் ஜடேஜா ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர்.

19.5 ஓவர்களில் குஜராத் அணி 161 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டமிழந்தது. புனே அணியின் உனத்கண்ட் மற்றும் இம்ரான் தாகிர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

162 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய புனே அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரஹானே, திருப்பாதி களமிறங்கினர். ஆனால், குஜராத் வீரர் சங்கவானின் சிறப்பான பந்து வீச்சால் முதல் ஓவரிலேயே 2 விக்கெட்டுகளை இழந்து புனே அணி தடுமாறியது.

தொடர்ந்து குஜராத் பந்து வீச்சாளர்களின் நேர்த்தியான பந்துவீச்சில் புனே அணியின் விக்கெட்டுகள் சரிந்தன.

42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து அந்த அணி தடுமாறிய போது பென் ஸ்டோக்ஸ் நிலைத்து நின்று விளையாடி புனே அணியை வெற்றிப் பாதையில் கொண்டு சென்றார்.

பின்னர் அதிரடியாக விளையாடிய அவர் சிக்ஸர்களும், பவுண்டரிகளும் விளாசி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

அவருக்கு பக்கபலமாக நின்று டோனியும் ஓட்டங்களைச் சேர்க்க புனே அணி வெற்றி இலக்கை நோக்கி சீராக பயணித்தது.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய ஸ்டோக்ஸ் 63 பந்துகளில் 7 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் சதமடித்து அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.

19.5 ஓவர்களில் புனே அணி 167 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் குஜராத் அணியை வீழ்த்தியது. குஜராத் அணி சார்பில் சங்வான் மற்றும் பாசில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை எடுத்தனர்.

இந்த வெற்றி குறித்து புனே அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்தவை வருமாறு:-

எங்கள் அணியின் தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. ஆனால், டோனியும், ஸ்டோக்ஸும் நிலைத்து நின்று ஆடி அணியை தலைநிமிர வைத்தனர். குறிப்பாக ஸ்டோக்ஸின் அதிரடியான ஆட்டம் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது. சிறிய மைதானமாக இருந்ததால் அதை ஸ்டோக்ஸ் சரியாக பயன்படுத்தி சிக்ஸர்கள் அடித்தார்.

குஜராத் அணியை 161 ரன்னுக்குள் கட்டுப்படுத்தியது தான் சிறப்பானது. இதற்காக பந்து வீச்சாளர்களைப் பாராட்டுகிறேன்.

எங்கள் அணியில் உள்ள ஸ்டோக்ஸ் மிகச் சிறந்த வீரர். அவரை நினைத்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# மும்பையிடம் வீழ்ந்தது பெங்களூர் ரோயல்ஸ்!



வான்கடே, மே 03

வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மும்பை இந்தியன்ஸ் - ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கு இடையிலான போட்டி வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய பெங்களூர் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணியின் பார்தீவ் பட்டேல், ஜோஸ் பட்லர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார். முதல் ஓவரை சவுதரி வீசினார். முதல் பந்திலேயே பார்தீவ் பட்டேல் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார்.

அடுத்து பட்லர் உடன் ராணா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 61 ஓட்டங்கள் சேர்த்தது. பட்லர் 33 ஓட்டங்களிலும், ராணா 27 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். பின்னர் வந்த ரோகித் சர்மா நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த, பொல்லார்ட் 17 ஓட்டங்களிலும், கரண் சர்மா 9 ஓட்டங்களிலும் வெளியேறினார்கள்.

குருணால் பாண்டியா 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரிட்டையர்ட் ஹர்ட் மூலம் பெவிலியன் திரும்பினார்.

மும்பை அணியின் வெற்றிக்கு கடைசி இரண்டு ஓவர்களில் 18 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19 ஆவது ஓவரின் 3 ஆவது பந்தில் ரோகித் சர்மா சிக்ஸர் விளாசினார். இதனால் கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது.

முதல் நான்கு பந்திலும் தலா ஒரு ஓட்டங்கள் அடிக்க, ஐந்தாவது பந்தை ரோகித் சர்மா பவுண்டரிக்கு விரட்ட மும்பை இந்தியன்ஸ் அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரோகித் ஆட்டநாயகன் விருது பெற்றார். 10 லீக் ஆட்டத்தில் 8 வெற்றியுடன் 16 புள்ளிகள் பெற்ற மும்பை, பிளே ஒப் சுற்றை உறுதி செய்தது.

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட்: பாகிஸ்தான் 172 ஓட்டங்கள் சேர்த்தது!

பார்படோஸ், மே 03

பார்படோஸில் நடைபெற்று வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் பாகிஸ்தான் 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 172 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் பார்படோஸில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்த டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

சேஸின் சதத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 286 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சேஸ் 131 ஓட்டங்களுடனும், ஜேசன் ஹோல்டர் 58 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. சேஸ் முதல் நாள் எடுத்திருந்த 131 ஓட்டங்களிலேயே ஆட்டம் இழந்தார். அதேபோல் ஹோல்டரும் 58 ஓட்டங்களிலேயே ஆட்டம் இழந்தார். இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 98.5 ஓவர்களில் 312 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக முகமது அப்பாஸ் 4 விக்கெட்டுகளும், முகமது ஆமிர் 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களாக அசார் அலி, அகமது ஷேசாத் ஆகியோர் களம் இறங்கினார்கள். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 155 ஓட்டங்கள் குவித்தது.

அகமது ஷேசாத் 70 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிஷூ பந்தில் ஆட்டம் இழந்தார் அடுத்து வந்த நட்சத்திர வீரர்கள் பாபர் ஆசம், யூனிஸ்கான் ஆகியோர் 'டக்அவுட்' ஆகி வெளியேறினார்கள்.

இதனால், 161 ஓட்டங்களுக்குள் மூன்று விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்து மிஸ்பா உல் ஹக் களம் இறங்கினார். அசார் அலியுடன் இணைந்து மிஸ்பா உல் ஹக் 2 ஆவது நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட்டுகள் இழக்காமல் பார்த்துக் கொண்டார்.

இதனால், பாகிஸ்தான் 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 172 ஓட்டங்களை எடுத்துள்ளது. அசார் அலி 81 ஓட்டங்களுடனும், மிஸ்பா உல் ஹக் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

## தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், இந்தியப் படையினர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து நிகழ்த்திய படுகொலை தொடர்பான செய்திகளைப் பத்திரிகையில் பிரசுரிக்கும் போது 'படுகொலை' என்ற சொற்பதத்தைப் பயன்படுத்த வேண்டாம் என யாழ்ப்பாணத்துக்கான இந்தியக் கொன்சூலர் ஜெனரல் நடராஜன் தம்மை அடிக்கடி கேட்டுக்கொள்கின்றார் எனவும் சரவணபவன் எம்.பி. விசனம் வெளியிட்டார்.

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட இரு ஊடகப் பணியாளர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு 'வேட்கை' என்றபெயரில் நேற்று அந்தப் பத்திரிகையின் அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நடராஜன் என்பவர் இந்தியத் துணைத் தூதுவர் அல்லர் எனவும், அவரது பதவி கொன்சூலர் என்ற அதிகாரமற்ற பதவி என்றும் தெரிவித்த சரவணபவன், அந்தப் பதவியை வைத்துக் கொண்டு அவர் கட்டுப்பாடுகளை விதிக்க முற்படுகின்றார் எனவும் கூறினார்.

தேவையில்லாமல் இங்குள்ள அனைத்து விடயங்களிலும் அவர் அதிகம் தலையிடுகின்றார். மூக்கை நுழைக்கிறார். இத்தகைய போக்கை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு நாம் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்திய விசா வழங்கும் அலுவலகத்தில் 'றோ' அலுவலர்களே பணியாற்றுகின்றனர் எனவும் சரா எம்.பி. தெரிவித்தார்.

'நான் இந்தியாவுக்கு எதிரானவன் அல்லன். இந்தியாவில் தான் எமது தொப்புள்கொடி உறவுகள் வாழ்கின்றனர். அதனால் இந்தியாவுக்கு எதிராகச் செயற்படமாட்டோம். ஆனாலும், இந்திய மத்திய அரச நிர்வாகம் எமக்கு எதிராகச் செயற்படுவது கண்டிக்கத்தக்கது. – எனவும் சரவணபவன் எம்.பி 'காலைக்கதி'ருக்குத் தெரிவித்தார்.

மேற்படி அஞ்சலி நிகழ்வில், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம், எம்.கே.சிவாஜிலிங்கம், பரஞ்சோதி, வலி.வடக் குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தியாவைப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருக்கின்றமை அரசியல் அவதானிகளின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தின் முன்பாக இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு இந்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறும். முன்னதாக பிற்பகல் 2.30 மணியளவில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஞாபகார்த்த நினைவு தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது யாழ்.ஊடக அமையம்.

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்புக்கு சிங்கள பௌத்த மக்கள் இடையிலான அரசியலில் ஆதரவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

தேசியமட்டத்திலான தேர்தல் ஒன்றில் வெற்றி பெற மைத்திரி – ரணில் அரசு நினைக்குமாயின், தமிழ், சிங்களக் கட்சிகளின் ஆதரவை அது முழுமையாகப் பெற வேண்டியது அவசியம்.

அப்படியும் கூட பெரும்பான்மையான வாக்குகளைப் பெறக் கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவு. தேர்தல் வன்முறை, கள்ள வாக்குகள் மூலம் வெற்றி பெற்றாலும் கூட அது அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

அது ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வருவதை விட பாரதூரமான நிலைமையாக மாறும். எவ்வாறாயினும் ராஜபக்ஷவினருக்கு மாற்றாக ஒரு சக்தியை தென் பகுதியில் உருவாக்குவது தற்போது எந்த வகையிலும் சாத்தியமாகாது. – இவ்வாறு நிர்மால் ரஞ்சித் தேவசிறி தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசிடம் இருந்து நல்லதோர் முடிவைத் தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என்று நேற்று முன்தினம் அம்பாறையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் வைத்து சம்பந்தன் விடுத்த அறிவிப்பு பிரதிபலிப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் இதுவரை விடயங்கள் தமிழ்க் கூட்டமைப்பின் தலைமைக்கு ஓரளவுக்கேனும் திருப்தி தரும் விதத்தில் நகர்கின்றன என்பதையே இந்த அறிவிப்பு காட்டுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கூட்டமைப்புத் தலைமையின் எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கை பலன் தருமா என்பது இவ்வாரத்தில் நடைபெறும் அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழுவின் போக்கிலேயே தெளிவாகும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (உ)

## குப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள், அமைப்பாளர்களின் தலையீட்டில் இடம்பெற்றுள்ளமை இம்முறை விசேட அம்சமாகும்.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதான அரசியல் கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் இடம்பெற்ற மைதானங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கூட்டத்திற்குப் பின்னர் மிக மோசமாகக் குப்பைகள் தேங்கிக் காணப்படுவது வழமை.


சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் இம்முறை கண்டி கெட்டம்பே மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கூட்டம் முடிந்த நிலையில் அந்த மைதானத்தைச் சுத்திகரிப்பதற்கான நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எஸ்.பி. திஸாநாயக்க, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

# வடமாகாணத்தில் எந்த இடத்திற்கு சென்றாலும் படையினர் மீதான குற்றச்சாட்டுக்களே அதிகம்

### *மக்கள் விரைவில் கிளர்ந்தெழுவர் என முதலமைச்சர் ஆரூடம்*



மன்னார், மே 03

"வடக்கே எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அங்கு படையினர் தொடர்பான குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்படுகின்றன. அந்தளவிற்கு அவர்களின் அதிகாரம், ஆக்கிரமிப்பு எல்லை மீறியுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எடுத்துக்கூறியும் அவர்களுக்கு உண்மைநிலை புரியவில்லை."

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அரச படைகளால் எமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாக நான் அடிக்கடி கூறுகின்றமையைக் கேட்டு இங்குள்ள படையினருக்கு என்மீது கோபம் ஏற்படக்கூடும். எனினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட பகுதியின் முதற்குடிமகன் என்ற வகையில் இங்குள்ள மக்களின் மனக் குறைகளை அரசுக்கு எடுத்துக்கூற வேண்டியது எனது கடமையாகும் எனவும் அவர் கூறினார்.

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு படையணியினரும் எங்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று எம் மக்கள் கோஷமிடப்போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதிபடத் தெரிவித்தார்.

மன்னார் – முசலி பிரதேச சபையின் சிலாவத்துறை பொது நூலகத் திறப்பு விழா நேற்று நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

வடபகுதியின் எந்தவொரு கிராமத்திற்குச் சென்றாலும் அங்கு படையினர் காணிகளை அபகரித்து வைத்திருக்கின்றார்கள், வீடுகளை அபகரித்து வைத்திருக்கின்றார்கள், அலுவலகக் கட்டடங்களை அபகரித்து வைத்திருக்கின்றார்கள், கடற்றொழில் புரியக்கூடிய கடற்பிரதேசங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள், விவசாய நிலங்களை அபகரித்து வைத்திருக்கின்றார்கள் என்று குறைப்பட்டுக்கொள்ளாத கிராமங்களே இல்லை.

யுத்தம் முடிவடைந்து 8 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரும் பொதுமக்களின் பூர்வீகப் பகுதிகள் அவர்களிடம் மீளளிக்கப்படாமை எமக்கு வருத்தத்தைத் தருகின்றது.

படையினரின் வசமுள்ள காணிகள் அனைத்தும் அவர்களின் தேவைக்கு அவசியமானவை என்று அரசு நினைப்பதாகத் தெரிகின்றது. ஆனால் படையினர் வர்த்தக நோக்கங்களோடு விவசாயம் செய்கிறார்கள் என்றால் ஜனாதிபதியோ பிரதமரோ அதைப் புரிந்துகொள்ளவில்லை.

பொதுமக்களால் எம்மண்ணில் வளர்க்கப்பட்ட தென்னைகளிலிருந்து கிடைக்கப்பெறும் தெங்கு உற்பத்திகளில் வர்த்தகம், பழஉற்பத்தியில் வர்த்தகம், கடல் உணவில் வர்த்தகம் என பல வர்த்தகங்களில் படைகள் ஈடுபட்டு வருவது அரசிற்கு தெரியாமலா இருக்கின்றது?

அவர்களை வடக்கிற்கு அழைத்துவந்து ஒவ்வொரு கிராமங்களிலும் எவ்வளவு நிலங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதை நேரடியாகக் காண்பித்தால் கூட படையினரை வாபஸ் பெறுவார்கள் என்பது சந்தேகமே.

ஏனெனில் அரசியல்வாதிகள் இராணுவத்தினரையும் வேறு படையணியினரையும் இங்கு வைத்திருப்பது பாதுகாப்பு காரணங்களுக்காக அல்ல. அடுத்த தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே. படையினரை வாபஸ் பெற்றால் முன்னைய அரசாங்கத்தவர்கள் அடுத்த தேர்தலில் சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுவிடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு இருக்கும் வரையில் இவர்களை வெளியேற்றுவது சிரமமே.

ஆனால் நாம் தொடர்ந்து அவர்களை அகற்ற குரல் கொடுத்து வருவோம். இன்று மக்கள் விழித்துக் கொண்டுள்ளார்கள். ஜனநாயகம் என்ன என்பதைப் புரிந்து கொண்டுள்ளார்கள். இதனாலேயே படையினர் வெளியேறவேண்டும் எனக் குரல் கொடுக்கின்றனர். – என்றார். (ம)

# காணி, பொலிஸ் அதிகாரம் கிடைத்தாலேயே சிறுபான்மை மக்களுக்கு விமோசனம் கிட்டும்

### கிழக்கு மாகாண முதலமைச்சர் கருத்து

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் மட்டுமே சிறுபான்மை மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமையைத் தடுப்பதுடன் இனவாதச் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த முடியும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் –

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் நினைவு தின நிகழ்வின்போது, அதிகாரப் பகிர்வு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதேபோன்று ஜனாதிபதியும் அதிகாரப் பகிர்வு குறித்து சாதகமாக கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்.

ஆகவே, இவர்களின் ஆட்சிக்காலத்திலேயே சிறுபான்மையினருக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் பிரதான சிறுபான்மைக் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன உறுதியாக உள்ளன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் ஒன்றிணைந்த நாட்டில் அதிகாரப் பகிர்வைப் பெற்றுத் தருவதில் முழுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.



இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் பல்வேறுபட்ட காரணிகளால் எமது மக்கள் காணிகளை இழந்துள்ளார்கள். அவற்றையெல்லாம் மீட்டுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. அதனால் தான் அதிகாரப் பகிர்வு செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு நாம் அரசைக் கேட்கின்றோம். இதற்கு மக்கள் கருத்தறியும் நடவடிக்கை அவசியமில்லை என நான் எண்ணுகின்றேன்.

ஏனெனில், ஏற்கனவே அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த மக்கள் கருத்தறியும் நடவடிக்கை சட்டரீதியாக தேவையற்றது. அது மட்டுமல்லாமல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாத அரசியல் தீர்வு என்பது உப்பில்லாப் பண்டத்தைப் போலாகும்.

வடக்கும் கிழக்கும் மாத்திரம் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு கோரவில்லை. ஏனைய 7 மாகாணங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். – என்றார் கிழக்கு மாகாண முதலமைச்சர். (ம)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை இறுதிசெய்வது குறித்து இன்றும் நாளையும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைக்கால அறிக்கையின் முதல்வரைவு வடிவம் ஏற்கனவே வழிகாட்டல் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில் விடயங்கள் இன்றும் நாளையும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்பட்டதும் அதன் பிரதிகள் அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினர்களான சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்றும் –

அதனடிப்படையில் அரசமைப்புக் கவுன்ஸிலாக நாடாளுமன்றம் கூடி அந்த இடைக்கால அறிக்கையை ஆராயும் என்றும் – மேலும் கூறப்பட்டது. (உ)



# தொழில் வாய்ப்புக்கு ஏற்றவாறு முதலீடு செய்ய முன்வாருங்கள்

## புலம்பெயர் தமிழரை அழைக்கிறார் சாந்தி எம்.பி.

கிளிநொச்சி, மே 03

யுத்தம் நிறைவு பெற்று எட்டு வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நிலைபேறான வருமானத்தை ஏற்படுத்தக் கூடிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் மக்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களில் முதலிட முன்வாருங்கள்.

-இவ்வாறு புலம்பெயர் தமிழர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உரிய பதிலை வழங்கக்கோரி மே தின நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தரும் ஒரு குரலாக அது ஒலிக்கவில்லை. காணாமல் ஆக்கபட்ட உறவுகள் எங்கே என்ற வெளிப்படுத்தலை கோரிய போராட்டமாகவே இது காணப்படுகிறது.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை கேட்டுத்தான் இந்தத் தாய்மார் போராடி வருகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் தாங்கள் தொலைத்த உறவுகளின் சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் உள்ளன.

அன்று கண்ணகி தன்னிடமிருந்த ஒற்றைச் சிலம்பினூடாக தனது கணவன் கள்வன் இல்லை என்று நிரூபித் தாள். இதே போன்று தற்பொழுது இந்தத் தாய்மாரிடம் இருக்கும் சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் அரசு பதில் கூற வலியுறுத்துவதற்கான ஆயுதமாகக் காணப்படுகிறது.

இந்த அரசு சர்வதேசத்துக்குத் தனது பதிலை விரைந்து வெளிப்படுத்த வேண்டும். இந்த மக்களின் சாத்வீக ரீதியான போராட்டத்தைத் தொடர விட முடியாது.

அதுமட்டுமல்லாது இங்குள்ள மூலப் பொருள்களை முடிவுப் பொருள்களாக மாற்றும் தொழிற்சாலைகளை ஆரம்பித்து எமது மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை கொடுத்து அவர்களது வருமானத்தை உயர்த்தும் திட்டங்களை அரசு ஏன் வகுக்காமல் இருக்கிறது.

எமது மக்களையும், பிள்ளைகளையும் தொடர்ந்து கையேந்துபவர்களாகவே இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் எமது சமூகம் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும் வரையில் கையேந்தும் ஓர் இனமாக இருக்கவில்லை.

அன்று பொருளாதாரத் தடை காலத்திலும் அன்று அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வசதிகள் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படாத நிலையிலும் நாங்கள் தன்மானத்தோடும் கௌரவத்துடனும் வாழ்ந்தோம்.

இதே வேளை, இந்தத் தொழிலாளர் தினத்திலும் உடலை வருத்தி உழைத்து எமது மக்களுக்கு உதவி செய்யும் புலம்பெயர் உறவுகளே உங்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

எமது மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் தொழிற்சாலைகளில் உங்களது பணத்தை முதலீடு செய்து நம்முடைய மக்கள் சுய கௌரவத்துடன், உழைத்து வாழ்வதற்கு வழி செய்யுங்கள்.-என்றார். (ஐ)

# கிளிநொச்சி பனை வள சங்க மே தின ஊர்திக்கு முதலிடம்!

### பணப்பரிசும் வெற்றிக் கேடயமும்



மே தின ஊர்தி தரவரிசையில் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊர்தி முதலிடம் பெற்று அதற்கான பரிசில்களைத் தட்டிச் சென்றது.

சர்வதேச மே தினத்தை முன்னிட்டு வடமாகாண கூட்டுறவாளர்களால் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மே தினப் பேரணி ஊர்வலத்தில் வட மாகாணத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட ஊர்திகள் பங்குபற்றி யிருந்தன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊர்தி மாவட்டத்தின் முதல்தர ஊர்தி என்ற நிலையை பெற்று 20 ஆயிரம் ரூபா பணப் பரிசையும், வெற்றிக் கேடயத்தையும் தட்டிச் சென்றது. (ஐ-70)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், மே 03

நாளை வியாழன் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் கொல்லங் கலட்டி, வித்தகபுரம், மாவைகலட்டி, கீரி மலை, கூவில், நல்லிணக்க புரம், கீரிமலை சந்தி கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தை பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் பரப்புக்கடந்தான் பிரதேசம், பரப்பாங்கண்டல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார். (இ)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிளவு!

கொழும்பு, மே 03

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிளவு நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக இவ்வாறு பிளவு நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் ஒரு தரப்பு உறுப்பினர்கள் யோசனையை ஆதரித்துள்ள நிலையில் மற்றுமொரு தரப்பினர் இந்த யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, காலிமுகத் திடல் மைதானத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையை ரத்துச் செய்யும் தீர்மானத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# வவுனியாவில் நூல்வெளியீடு

பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லைநாதனின் 80 ஆவது பிறந்த தினமும் பேராசிரியர் கலாகீர்த்தி பொன்.பூலோகசிங்கத்தின் தமிழ் ஆய்வுச் சிந்தனைகள் நூல்வெளியீடும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகப் பேராசிரியர் சி.தில்லைநாதன், திருமதி மல்லிகா தில்லைநாதன், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் பொ.பூலோகசிங்கம்அவரின் சகோதரர் கதிர்காமத்தம்பி திருமதி ராஜலஷ்மி கதிர்காமத் தம்பி ஆகியோர் கலந்து கொள்வர்.

நூலின் அறிமுக உரையை வைத்திய கலாநிதி செ.மதுரகனும், நூல் ஆய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வள்ளிபுரம் மகேஸ்வரனும் ஏற்புரையை நூல் பதிப்பாசிரியரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கௌரிகாந்தனும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், உப பீடாதிபதி முனைவர் பா.தனபாலன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், தமிழ்மணி கலாநிதி அகளங்கன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை ஓய்வு பெற்ற கிராம அலுவலர் எஸ்.வேலுப்பிள்ளை, சிரேஷ்ட ஆசிரியை திருமதி துஷ்யந்தி வேலுப்பிள்ளை ஆகியோரும் பெற்றுக் கொள்வர். (ச)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 03

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் கற்பிக்கும் விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறும்.

க.பொ.த.சாதாரண தரத்தில் விஞ்ஞானப் பாடத்தின் அடைவு மட்டத்தை உயர்த்துதல், கடந்த வருடத்தின் விஞ்ஞானபாட பெறுபேறுகள் பற்றி ஆராய்தல் போன்ற விடயங்கள் இந்தச் செயலமர்வில் பேசப்படவுள்ளமையால் தரம் 11 இற்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# சின்மயா மிஷனில் இரத்ததான முகாம்

பூஜ்யகுருதேவரின் 101 ஆவது ஜெயந்தியை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணி வரை இல.9, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள சின்மயா ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3447 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ச)





வட மாகாண முதலமைச்சரின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து 35 லட்சம் ரூபா செலவில் மன்னார் கீரி கடற்கரையில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அந் நிகழ்வுக்கு அதிதிகள், பாண்ட் இசை வாத்தியங்களுடன் அழைத்து வரப் படுகின்றமையையும், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிலையத்தைத் திறந்து வைக்கின்றமையையும் படங்களில் காணலாம். (112) (படப்பிடிப்பு வாஸ் கூஞ்ஞ மன்னார் நிருபர்)

# உலக சைவ மாநாட்டில் கலந்து கொள்ள 'தமிழருவி' சிவகுமாரன் லண்டன் பயணம்



இலங்கையின் தலைசிறந்த தமிழ் சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன் எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெறும் உலக சைவ மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

லண்டன் சைவத்திருக் கோவில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள பதினெட்டாவது உலக சைவ மாநாட்டின் முதல்நாள் மாநாடு லண்டன் ஆர்ஜ்வே உயர் வாசல் குன்று முருகன் ஆலய மகாமண்டபத்திலும், இரண்டாம் நாள் மாநாடு லண்டன் கற்வேட், லூசியம் சிவன் ஆலய கலாமண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

'வேத சிவாகம மரபுகளும் ஆலயவழிபாடுகளும்', 'சைவத்தின் தொன்மையும் வன்மையும்' என்னும் பொருள்களில் முறையே இருதினங்களும் தமிழருவி சிவகுமாரன் பேருரையாற்றவுள்ளார்.

இதேவேளை, 8 ஆம் திகதி கிளாஸ்கோ நகரில் நடைபெறும் துணை மாநாட்டில், 'சைவ விழுமியங்கள்' என்னும் பொருளிலும் 10 ஆம் திகதி ஸ்கொட்லாந்து நாட்டில் நடைபெறும் துணை மாநாட்டில், 'நால்வர் தமிழ்' எனும் பொருளிலும் அவர் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து லண்டன் ஈலிங்கில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கியப் பெரு விழாவில் சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டு 'புலம் பெயர் நாடுகளில் தமிழ் - நேற்று, இன்று, நாளை' என்னும் பொருளில் அவர் உரையாற்றுவார்.

லண்டனில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது, உலக சைவ மாநாட்டில் கலந்துகொண்டதில் இருந்து தொடர்ச்சியாக இங்கு ஏழு மாநாடுகளில் பங்குபற்றிவரும் பெருமைக்குரியவர் தமிழருவி.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், ஹொலண்ட், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலக்கிய சமய அமைப்புகளால் தமிழ் இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகளுக்காகத் தமிழருவி சிவகுமாரன் அழைக்கப்பட்டு வருகிறார்.

தனது நாவன்மையின் சிறப்பால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சைவத்தினதும் தமிழினதும் பெருமைகளைப் பரப்பி 59 விருதுகளை இதுவரை பெற்றுள்ளார்.

இந்த முறை லண்டனில் நடைபெறும் சைவமாநாட்டில் இந்தியாவில் இருந்து சீர்வளர் கௌமார மடலாய ஆதீனம், சிருங்கேரி ஸ்ரீ நாராயணி பீட அடிகளார், சொல்வேந்தர் சுகி சிவம், கனடாவில் இருந்து கலாநிதி ராமநாதன் லம்போதரன் உட்பட இன்னும் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும் பேராளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

– லண்டனிலிருந்து 'சைவத் திருமணி' ந.சச்சிதானந்தன்.




# ஹொரணையில் 31 லட்சம் ரூபா பணம் கொள்ளை

ஹொரணை - அரமா கொல்ல பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் 31 லட்சம் ரூபா பணம் வங்கியில் வைப்புச் செய்ய நேற்று முற்பகல்எடுத்துச்செல்லப்பட்டபோது கொள்ளையிடப்பட்டுள்ளது.

இராணுவச் சீருடைக்கு இணையான சீருடையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பணம் எடுத்துச் செல்லப்பட்ட வாகனத்தை மறித்து, கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஹொரணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கர்ப்பிணிப் பெண்ணும் தாயும் வெட்டிக் கொடூரக் கொலை!

## அம்பாந்தோட்டையில் சம்பவம்

அம்பாந்தோட்டை – ஹுங்கம, குருபொக்குண பிரதேசத்தில் இரண்டு பெண்கள் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்கு இந்தக் கொலைகள் தொடர்பான தகவல்கள் நேற்று மதியம் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

72 வயதான வயோதிபப் பெண்ணும் கர்ப்பிணியான 32 வயதான அவரது மகளும் இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் கொலை செய்யப்பட்டிருந்த வீட்டின் உள்ளே அலுமாரிகள் அனைத்தும் கிளறப்பட்டுக் காணப்பட்டன எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட வயோதிபப் பெண் சூரியவெவ பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் காரியவசம் என்பவரின் தாய் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட கர்ப்பிணிப்பெண்ணின் கணவர் அம்பாந்தோட்டை தொழில்நுட்பக் கல்லூரிக்கு பாடநெறிக்காகச் சென்றிருந்தார். அவர் வீடு திரும்பிய போது வீட்டின் முன்பக்க வாசல் கதவு திறந்து காணப்பட்டுள்ளது. வீட்டுக்குள் சென்று பார்த்த போது மனைவியும், மாமியாரும் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர் எனக் கர்ப்பிணிப் பெண்ணின் கணவரான ஜயசிங்க கோரளே ஆராச்சிகே சம்பத் என்பவர் பொலி ஸாரிடம் கூறியுள்ளார்.

# வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் மன்னார் ஆயரைச் சந்தித்தார்

மன்னார், மே 03

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மன்னார் மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடக்கு முதல்வர் அங்கு சில நிகழ்வுகளில் பங்குபற்றினார்.





இந்த விஜயத்தின் ஓர் அங்கமாகவே மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று ஆயரைச் சந்தித்தார்.

சமயங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடனேயே இச்சந்திப்பு இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

நேற்றைய சந்திப்பில், வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஏனைய பங்குக் குருக்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளைத் தலைவர், தொழிலதிபர் றோஜன் போன்ற பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் ஆயரைச் சந்தித்த வடக்கு முதல்வர் பின்னர், ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகையையும் சென்று பார்வையிட்டார். (ம)

# 20 லட்சம் பேர் திரண்டனராம்!

கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு நாடு முழுவதிலுமிருந்து 20 லட்சம் மக்கள் கலந்துகொண்டனர் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்தத் தகவலைக் கூறினார்.

நாட்டுடன் விளையாட யாருக்கும் அனுமதியில்லை என்ற செய்தியை காலிமுகத் திடலுக்கு வருகைதந்த மக்கள் வெள்ளம் அரசாங்கத்துக்குப் பகிரங்கமாகச் சொல்கின்றது. – எனவும் அவர் கூறினார். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.